ஒக்டோபர் 1993
விலை 12 ரூபா

# சாளரம்


இளையோர்
திங்கள் இதழ்



## பொன்விழாக் கண்ட
## யாழ். இந்து மகளிர் கல்லூரி

## பாதுகாப்பான
## பாரவாகன சேவை

**நம்பிக்கை, உத்தரவாதம்**
**ஆகியவற்றுடன் கூடிய பாதுகாப்பை**
**நாம் வழங்குகின்றோம்.**




# நந்தா ரான்ஸ்போட்ஸ்

## பண்டத்தரிப்பு.

உரிமையாளர் - **K**. சிறீதரன்

கதவு 3 (21) காற்றலை 5

# மாணவர்களின் மனவுறுதி

**போ**ராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இம்மண்ணில், அரச படையினரால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இழப்புகள், துன்பங்கள் என்பனவற்றிற்கு மத்தியில், உயிருக்குப்பயந்து எங்கும் ஓடிவிடாமல் இந்த மண்ணையே பற்றிப்பிடித்து வாழும் அனைத்து மக்களுமே மண்ணை நேசிப்பவர்கள் - தேசப்பற்றுமிக்கவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அரசபடைகளின் ஆக்கிரமிப்பால் அடிக்கடி ஏற்படும் இடம் பெயர்வுகள் தொடர்கின்றன; வானூர்திகளின் குண்டுவிச்சுக்களால் பாடசாலைகள் தரைமட்டமாக்கப்படுகின்றன; பாடசாலை செல்லும் வழியிலேயே மாணவச் செல்வங்கள் குண்டுகளால் குதறப்பட்டு குருதித் துண்டங்களாக்கப்படுகின்றனர்.

இருப்பினும், கல்வி கற்றல் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. வீதிகளில் மாணவ அணிகள் சாரிசாரியாக சென்று கொண்டுதானிருக்கின்றன.

இன்நிகழ்வுக்காட்சிகள் எமக்கெதிரான அரசின் செயற்பாடுகளுக்கு சவால் விடுவதாகவே அமைகின்றன. போர் நிகழ்வுகளுக்குப் பயந்து கொண்டு பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் முடங்கிக் கிடக்கும் மாணவர்களை இந்த மண்ணில் எங்கும் காணமுடியாது.

ஊரடங்குச்சட்டம் சிறீலங்கா அரசினால் அமுல் செய்யப்பட்டிருக்கும். எங்கள் ஊர்கள் தோறும் பாடசாலைகள் உட்பட எல்லாமே இயங்கிக்கொண்டுதானிருக்கும்.

வான்வெளி எங்கும் வானூர்திகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் - வழியெங்கும் எம் தேசத்தின் மாணவர்கள் பாடநூல் சுமந்து நடந்து கொண்டுதானிருப்பர்.

அவர்தம் முகங்களில் பயமோ கலவரமோ இருக்காது. கலகலப்பாகவே அவர்கள்செல்வர்.

இவையெல்லாம் தமிழீழ மாணவர்களின் மனவுறுதியினையே சுட்டிக் காட்டுகின்றன.

கடந்தகாலங்களில் கடும்போர் நடந்துகொண்டிருந்த வேளைகளில் போரிடும் போராளிகளுக்கு களத்தில்நின்று உதவும் நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.


இன்று எம் தேசமெங்கும் யுத்தக்கருமேகங்கள் சூழ்ந்துள்ளன. கடந்தகாலங்களைப் போலவே எம் மாணவர்கள் உறுதியுடனும், பொறுப்புடனும் நடந்து கொள்வார்கள் என்றே நம்புகின்றோம்.

## இந்த இதழில்...


- ஆசிரியர் தலையங்கம்
- பொன்விழா கண்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி
- வரலாற்று நூலில் முரண்பாடுகள்
- அரும்புகள்
- உயிர் கொல்லும் வாந்தி பேதி (கொலறா) இருந்து மக்களை காப்போம்
- பகலவன் பதில்கள்
- மாவீரன் பண்டார வன்னியன்
- கோரி என்றொரு தீவு
- இரத்தம் ஒரே நிறம் ஆனால் எல்லா இரத்தமும் ஒரே இரத்தமா?
- சொந்த நாடே சொர்க்கம்
- வெள்ளைப் பூண்டின் மருத்துவக் குணங்கள்
- எச்சம் [illegible] (சுற்றுச் சுழல் கவிதை)
- அறிவுலகம்
- மனநோயும், சமூக-கலாசார பொருளாதார நிலையும்
- போராளிக் கலைஞர்கள் இருவர்
- தெறிப்பு
- திலீபன் வளர்த்த தியாக வேள்வி

# பொன்விழா கண்ட

# யாழ் இந்து மகளிர் கல்லூரி




எமது பிரதேசத்து தமிழ்ப் பெண்களின் பாரம்பரியத்தை வெளிக்கொணர்வதில் இவ்வாண்டு பொன்விழா ஆண்டினைக் கொண்டாடிய யாழ் இந்து மகளிர் கல்லூரியானது தாய்க் கல்லூரியாக விளங்கி நிற்கின்றது. வேத காலங்களில் பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது. ஆனால் காலப்போக்கில் பெண்கள் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் விரும்பியோ, விரும்பாமலேயோ ஒதுக்கப்பட்டவர்களாக - வீடுகளில் முடங்கிக் கிடப்பவர்களாக மாறினர். இந்நிகழ்வுகள் அவ்வக்கால சமூக, மற்றும் அரசியலுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தது.

இன்று எமது பிரதேசங்களில் இந்துப்பாடசாலைகள் என்றாலும் சரி, கிறிஸ்தவ பாடசாலைகள் என்றாலும் சரி மதப்புறக்கணிப்புகள் பெரிதாக நடப்பதில்லை. அதேபோல் கல்வியில் பெண்கள் புறக்கணிக்கப்படுவதும் இல்லை.

ஆனால், அன்று எமது பிரதேசத்தில் அன்னியர்ஆட்சி காலத்துக்கு காலம் நடை பெற்றுவந்ததனால் அவர்கள் இப்பிரதேசமக்களின் குறிப்பாக பெண்களின் கல்வியில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவில்லை. குறிப்பாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிகளில் தம்மதம் சாரவைப்பதற்கு ஆண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதேயொழிய பெண்களின் கல்வியில் அக்கறை செலுத்தப்படவில்லை. அதாவது ஆண்களே பொருளாதாரத் தேட்டத்திற்குரியவர்களாக இருந்தபடியால் அவர்களது செல்வாக்குடன் மதம் மாற்றப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சியில் மதமாற்றமும், பொருளாதாரத் தேட்டத்திற்கு ஆங்கிலக் கல்வியின் அவசியமும் வேண்டப்பட்டதாய் கிறிஸ்தவக்கல்லூரிகள் பல உதயமாயின. இருந்த போதிலும் பெண்களின் கல்வியில் முன்னேற்றம் காணப்பட்டதாக இல்லை. இக்காலப்பகுதிகளிலும் ஆண்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது இதற்கு சமூகத்தில் காணப்பட்ட பொருளாதார, சமூக ஏற்ற இறக்கங்களும்காரணமாயிருந்துள்ளது ஆங்கிலேயர் காலத்தில் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கு இணையாக இந்துப் பாடசாலைகள் தோற்றம் பெற்ற போதிலும் இந்துப் பெண்களுக்கு என பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் 1943ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் திகதி யாழ்ப்பாண இந்துக் கல்லூரிகளின் அதிகார சபையினர் இக்கல்லூரியை ஆரம்பித்தனர். இக்காலப்பகுதியில் இக்கல்லூரியை ஆரம்பித்தற்கு கொடை வள்ளல் திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் பூமித்தானம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்று ஆரம்பித்த இக்கல்லூரியின் முதல் அதிபராக யாழ் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. ஏ. குமாரசாமி அவர்கள் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து பதவி வகித்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் நலன் விரும்பிகளின் முயற்சியினால் இன்று இக்கல்லூரி ஆலமரம் போல் வளர்ச்சி கண்டுள்ளது. இன்றைய அதிபரான திருமதி திவ்விய சிரோன்மணி நாகராசா அவர்கள் சிறப்பாக வழிநடாத்திச் செல்கின்றார்.

1943ம் ஆண்டு எட்டு ஆசிரியர்களுடனும் 110 மாணவர்களுடனும் ஆரம்பித்த இக்கல்லூரி இன்று 70க்கு மேற்பட்ட ஆசிரியர்களுடன் 2300 மாணவர்களைக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளது. 50 ஆண்டு கால வளர்ச்சி கொண்ட இக்கல்லூரி அன்னைக்கு இவ்வாண்டு விழாக் கொண்டாடி வாழ்த்த வேண்டுமென அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் பேரவாவின் விளைவாக பொன்விழாச் சபையை அமைத்து ஒற்றுமையுடன் ஆறு கட்டங்களாக பிரித்து விழா கொண்டாடப்பட்டது.

இதன் முதல் நிகழ்ச்சியாக மே மாதம் 29ம் திகதி மிகப்பிர மாண்டமாக கால்கோள்விழா கொண்டாடப்பட்டது. கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தர லிங்கம் அவர்கள் பிரதமவிருந்தின ராகக் கலந்து கொண்டார். எமது



பிரதேச மக்கள் சார்பாக பல பிரமுகர்கள் கல்லூரியின் சேவை யினை வாழ்த்தினர். அன்றைய தினம் மாணவர்களினால் அளிக் கப்பட்ட கலைநிகழ்ச்சி விழா வினை அலங்கரித்தது எனலாம்.

இரண்டாவது கட்டமாக பழைய மாணவர்களினால் ஒழுங்கு செய் யப்பட்ட விளையாட்டுப் போட்டி யும் மதியபோசனவிருந்துபசார மும் சிறப்பாக நடைபெற்றது.

மூன்றாவது கட்டமாக கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களின் முயற்சியினால் செப்டம்பர் 4 தொடக்கம் 8ம் திகதிவரையும் கல்விக்கண்காட்சி நடைபெற்றது.

இக்கண்காட்சியில் விஞ்ஞானம், கணிதம், கலை, புவியியல், சமூ கக்கல்வி, தமிழ், அழகியற்பாடங் கள் சம்பந்தமான கண்காட்சிகள் சிறப்பிடம் பெற்றிருந்தன. தற் போதைய பொருளாதாரத் தடை, எரிபொருட்தடை போன்றவற் றால் மக்கள் அவதிப்படும் காலம் இது. மாணவர்கள் தாம் கற்கும் பாடங்களில் செய்முறைப்பயிற் சியைச் செய்து கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலையிலும் கூட ஏறத்தாழ 5000 மாணவர்கள் ஆசிரியர்கள், ஆர்வலர்கள் வந்து கண்காட்சியைக் கண்டு களித்து மகிழ்ந்து சென்றனர் என்றால் மிகையாகாது.

நான்காவது கட்டமாக கல்லூரி அன்னைக்கு 9ம், 10ம் திகதிகளில் இரண்டு நாட்கள் முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது. முதல் நாள் நிகழ்ச்சியினை கல்லூரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்ச்சியினை பழைய மாணவர் களும் அளித்தனர். பலரும் பாராட்டும் விதத்தில் இக்கலை விழா சிறப்பாக நடந்தேறியது.

10ம் திகதி காலை பாடசாலை நிகழ்ச்சியாக பரிசளிப்பு விழா நடந்தேறியது.

ஐந்தாம் கட்டமாக 23.09.93ம் அன்று மிகச் சிறப்பான முறையில் பொன்விழாமலர் வெளி யீடும், நிறைவு பேருரை யும் நடந்தேறியது. பல் வேறு அறிஞர்களினதும், மாணவர்களினதும் ஆக் கங்களைக் கொண்ட மல ரை கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் வெளியிட்டு வைத்தார். நிறைவுப் பேருரையை பல்கலைக் கழக தமிழ்த்துறை தலை வர் பேராசிரியர் அ. சண் முகதாஸ் அவர்கள் நிகழ் த்தினார்.

ஆறாவது கட்டமாக சுபநாள் ஒன்றில் பொன் விழா ஆண்டினை ஞாப கப்படுத்தும் முகமாக பாட சாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பொன்விழா நூலகக் கட்டிடம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தினை செய்து முடிக்க சபை தீர்மானித்துள்ளது.

இறுதியாக பொன்விழாக் கண்ட கல்லூரியின் வளர்ச்சியில் ஊறித்திளைத்திருக்கும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மேலும் கல்லூரிக்கு சேவையாற்றி பெண்களின் கல்வி விருத்தியினை மேம்படுத்த வேண்டும் என வாழ்த்துகின்றோம். ●

## கணனி போன்ற தொலைபேசி



இங்கே நீங்கள் காண்பது விநோதமான ஆற்றல் மிக்க தொலைபேசி யாகும். இதுகணனிபோன்று செயலாற்றக்கூடியது. இந்தத் தொலை பேசியில் சிறிய திரை ஒன்றும் உள்ளது. தொலைபேசி எண்களை இயக்குவதற்குரிய அமுக் கிகளும் உள்ளன. மற்றவருடன் பேசும் போதே திரையில் தேவையானவற் றைக்காட்டவும் முடியும். செய்திகளைப் பதிவுசெய்யவும், அதனை பதிவு செய்து வெளியே எடுப்பதற்கான மட்டையும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. இவைமட்டுமல்ல முக்கியசெய்திகளை தனக்குள்ளே களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றலும் இன்னும் பலவித வசதிகளும் இத் தொலை பேசியில் உள்ளன.

மேற்படி வரலாறு ஆண்டு 7 என்ற நூல் ஒருவரால் ஆக்கப்பட்டு மற்றொருவரால் மீள் பார்வை செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அந்நூல் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்காக எழுதப்பட்டிருக்கிறது. வரலாறு புரிந்த மாணவர் மாத்திரமல்ல - இளைஞர்கள் மாத்திரமல்ல - அரை நூற்றாண்டு அகவையை நெருங்கிக்கொண்டிருக்கும் நான் கூட அதனை வாசித்துக் கவலையுற்றேன். அந் நூல் குறிப்பிடுகின்ற வரலாற்றுக் கால ஒழுங்குகள் தப்பும் தவறுமாகக் காணப்படுகின்றதால் மாத்திரமல்ல, வரலாற்றுண்மைகள்கூட மறைக்கப்பட்டும் திரிபுபடுத்தப்பட்டுமிருக்கின்றதினாலுமாகும்.

மேற்படி நூலில் காணப்படும் வரலாற்றுக் காலமுரண்பாடுகளும் வரலாற்றுத்திரிபுக் கருத்துகளும் எவை என்று பார்ப்போம். அவை அச்சுத் தவறுகள் என்றோ ஏனோ தானோ என்ற மனப்பான்மையுடன் எழுதப்பட்டவை என்றோ கூறமுடியாது. ஏனெனில் மேற்படி நூல் ஒருவரால் ஆக்கப்பட்டு மற்றொருவரால் மீள்பார்வை செய்யப்பட்டுள்ளது. எனவே எவ்வித தப்பும் தவறும் ஏற்படுவதற்கு இடமில்லை. அத்துடன் அவ்விருவரும் பல நூல்களை எழுதி வெளியிட்ட முன்னறிவும், ஆற்றலும் கொண்டவர்கள்.

மேற்படி நூல்-பக்கம் 3ல் 'இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம்' என்ற தலைப்பின் கீழ் இந் நாகரிகம் கி. மு. 4ஆம் நூற்றாண்டளவில் தோன்றி கி. மு. 2ஆம் ஆண்டளவில் மறைந்ததாக நம்பப்படுகின்றது. இந்நாகரிகம் பற்றிய ஆராய்ச்சிகள் கி. மு 20 ஆம் நூற்றாண்டில்தான் மேற்கொள்ளப்பட்டன. ஹைபர் கணவாயூடாக வந்த ஆரிய மக்கள் இந்நாகரிகத்தைப் பரப்பினார்கள் என்றும்.

பக்கம் 4 ல் இந்தியா என்ற தலைப்பின் கீழ் 'இந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் கி. மு. 4000 ஆண்டளவில் தோன்றி கி மு. 12000 ஆண்டளவில வீழ்ச்சி அடைந்ததாக நம்பப்படுகிறது என்றும்,

பக்கம் – 5ல், இந் நாகரிகத்தையுடைய மக்கள் எங்கிருந்து வந்தார்கள் என ஆராய்ந்தால் அவர்கள் கி. மு....15000 ஆண்டளவில்

# “வரலாற்று நூலில் முரண்பாடுகள்”

ஹைபர் கணவாயூடாக வந்தஆரிய மக்களாவர். இவர்கள் முதலில் இந்துநதிப் பிரதேசத்திலும், பின்னர் கங்கை நதிப் பிரதேசத்திலும் குடியேறினர். இவர்களே பிற்காலத்தில் கி. மு. 6ம் நூற்றாண்டளவில் இலங்கையிலும் தமது குடியேற்றங்களை அமைத்தவர்களாவர் என்றும் கூறப்பட்டுள்ளது

## வரலாறு ஆண்டு-7

ஆக்கம்:

திருமதி. கமலா குணராசா

மீள்பார்வை:

திரு. க. குணராசா

மேற்படி நூலில் தாம் கண்ட தவறுகளையும் முரண்பாடுகளையும் இக்கட்டுரையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கட்டுரை குறித்த மறுப்புக்கள், விளக்கங்கள் என்பன இருப்பின், அனுப்பிவைத்தால் அது சாளரத்தில் பிரசுரமாகும்.

அண்ணா இராசேந்திரம்

முன்னுக்குப் பின் முரண்பாடுகள் – கருத்திலும், காலங்களிலும் காணப்படுவதைக்காணலாம்.

பக்கம் 3இலும், 4இலும் குறிப்பிட்ட காலங்களுக்கிடையே பெரிய முரண்பாடு காணப்படுகின்றது. பக்கம் 3இல், இந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் கி. மு 4ம் நூற்றாண்டில் (அதாவது கி. மு. 300 ஆண்டுகளுக்கு முன்) தோன்றியது என்று காணப்படுகின்றது. ஆனால் இக்காலம் பக்கம் 4இல் கி. மு. 4000 ஆண்டளவில் (அதாவது கி.மு. 40 நூற்றாண்டளவில்) என்று காணப்படுகிறது. பக்கம்3ல், இந் நாகரிகம் மறைந்தது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில் என்றும் பக்கம் 4ல் கி.மு. 12000 ஆண்டளவில் (அதாவது கி. மு 120 நூற்றாண்டளவில்) என்றும் காணப்படுகின்றது. ஆனால் பக்கம் 5 ல் இந் நாகரிகத்தையுடைய மக்களான ஆரிய மக்கள் ஹைபர் கணவாயூடாக இந்தியாவுக்கு கி மு. 15000 ஆண்டளவில் (அதாவது கி. மு. 150 நூற்றாண்டளவில்) வந்துள்ளார்கள் என்று காணப்படுகிறது. அதாவது ஆசிரியரின் கருத்துப்படி, இந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் தோன்றி மறைவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஆரியர் இன்றைய இந்தியாவுக்குள் வந்துவிட்டார்கள். அதாவது ஆசிரியர் கருத்துப்படி இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் மறைவதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே (கி. மு. 15000- கி.மு. 12000 = 3000) ஆரியர் இந்தியாவுக்குள் வந்துவிட்டார்கள். அப்படியாயின் ஆரியர் இந்தியாவுக்குள் வந்து அங்கிருந்த திராவிடருடன் கலந்துவிட்ட பின்னர் எப்படி (இன்றைய பாகிஸ்தான் நாட்டின்) சிந்துநதிப் பகுதிகளில் உள்ள மொஹஞ்சதாரோ, ஹரப்பா, சங்குதாரோ போன்ற நகரப்பகுதிகளிலிருந்த நாகரிகம் அழிந்தது? எதனால் அழிந்தது? யாரால் அழிக்கப்பட்டது? அன்றி ஆரியர் இந்தியாவினுள் வந்த பின்னரா சிந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் உருவாகி அழிந்தது?

உண்மை வரலாறு இவ்வாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

பக்கம்சாராத எந்தவொரு மேல்நாட்டு, கீழைநாட்டு எழுத்தாளரும் (வரலாற்றாய்வாளர் உட்பட) இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் ஆரிய மக்களால்தான் பரப்பப்பட்டதென்றோ ஆரிய மக்களு

டையதென்றோ கூறவில்லை. பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களும் ஆரியரல்லாத ஒரு மக்கள் கூட்டத்தின் நாகரிகம் - பண்பாடு என்றே கூறினர். சிலர் திராவிட நாகரிகத்தை ஒத்தது என்று கூறியுள்ளனர். ஆரியருக்குச் சார்பான சில எழுத்தாளர்களைத் தவிர வேறு எவரும் ஆரியருடையது என்று கூறவுமில்லை. கருதவுமில்லை.

மொஹஞ்சதாரோ என்றால் அப்பகுதியில் இன்று வசிக்கும் மக்களின் மொழியில் இறந்தோர் மேடு (Mound of the Dead) என்றே பொருள்படுகிறது. அதாவது இறந்தோர் பலர் புதையுண்டு — புதைக்கப்பட்டுள்ள இடம் என்று பொருள் தரும். ஆரியர் படை எடுத்து வந்தபோது மொகஞ்சதாரோ பகுதியில் வாழ்ந்த மக்கள் பலர் கொலை செய்யப்பட்டு அழிக்கப்பட்டார்கள். அவ்விடத்தை மணல் மூடி மேடாகிற்று. அம் மேட்டை அகழ்ந்து பார்த்தபோது இந்த உண்மை உலகிற்குத் தெரியவந்தது.

சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களுள் யானை, பருத்த ஏரியுடன் கூடிய எருது மற்றும் கழுதை போன்றன அடங்குகின்றன. ஆனால் ஆரியர் பயன்படுத்திய விலங்குகளான குதிரையோ, மேற்காசியாவில் காணப்பட்ட ஒட்டகமோ அங்கு காணப்படவில்லை. ஆரியர் படை எடுத்து வந்தபோது அங்கு வாழ்ந்த மக்கள் பண்பாட்டில் உயர்ந்தவர்களாக வாழ்ந்தனர். ஆரியர் திளைத்திருந்த போர்வெறி, படை எடுப்பு, வழிப்பறி, பெண் கவர்தல் போன்றவற்றில் வெறுப்புக் கொண்ட உயர்பண்பினராக சிந்து வெளி மக்கள் வாழ்ந்துவந்தனர். அமைதி, கலைப்பண்பு நிறைந்து காணப்பட்டனர். இக் காலக்கட்டத்தில் போர் வெறிபோன்றவற்றில் மிகஈடுபாடு கொண்ட ஆரியர் கையில் இரும்புக் கருவிகளைக் கொண்டுவந்தனர். அத்துடன் குதிரைகளிலும் சவாரி செய்துவந்தனர். குதிரை, இரும்பு போன்றனவற்றைப் பயன்படுத்தாத சிந்து வெளி மக்கள் ஆரியரை எதிர்க்க வலுவின்றி அழிந்தனர். அறைகளில் குவியல்களாக எலும்புக்கூடுகளும் அவற்றிடையே இரும்புச் சட்டங்களும் காணப்பட்டன. இவை அவ்வுண்மையை விளம்புகின்றன.

மேற்கூறப்பட்ட விபரங்களுக்கு மேலதிகமான தகவல்கள் தேவைப்பட்டால் சேர் ஜோன் மார்ஷல் (Sir John Marshall) சேர் மோரிமர் வீலர் Sir Montimer wheeler கேராஸ் பாதிரியார் (Father Heras) போன்றோர் சிந்து வெளிப்பண்பாடு பற்றிக்கூறிய கருத்துக்களையும் நோக்கலாம், தவறுகளைத் திருத்தி வரலாறு அறிவியல் அடிப்படையில் எழுதப்பட்டு இளைஞர்களுக்கு வழிகாட்டப்பட வேண்டும் என்பதே எனது இக் கட்டுரையின் நோக்கமாகும். ❀


## தரம், சுவைமிக்க
## பாண், பணிஸ், கேக், ஐசிங்கேக்

## அலெக்ஸ் பேக்கறியின் தயாரிப்புகள்

(ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்)

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்

# அலெக்ஸ் பேக்கறி

பிரதான வீதி, ஆறுகால்மடம்.

# அரும்புகள்

## எழுக பெண்ணே

நிலவாய் குளிர்ந்தது போதும் பெண்ணே
நிமிர்ந்தெழு எரிக்கும் சூரியனாய்
கனவுகள் சுமந்தது போதும் பெண்ணே
கனல்விழி கொண்டு பகைபொசுக்கு
பூவாய் சிரித்தது போதும் பெண்ணே
புயலாய் களத்தில் இறங்கிவிடு
தேனாய் பாலாய் மொழிந்தது போதும்
தேசத்தின் மானம் காக்க எழு.

எம். காயத்திரி
கந்தர்மடம்

## அணுவாற்றல்

அணுவாற்றலினால்
அகிலமே ஆடிப்போகிறது.
ஆக்கத்திற்கும் அழிவிற்கும்
ஒன்றுசேரக் கைகொடுத்து
அங்கீகரிக்கும் அவலம்!
பரீட்சிப்புகளின் பரப்பாக
ஏழைப்பாட்டாளி வர்க்க
தேசங்களே தெரிவு
குட்டி நாடுகள் கூட
கைகொட்டி ஆராவரிக்கின்றன
அணுவாயுதங்களுடன்
அரை நூற்றாண்டிற்கு
முன்பு செய்த
அனர்த்தமே இன்னும் தொடர்கிறது
விளைவுகளாய்.
இருந்தும்
அமைதிப் போர்வையில்
அழிவுகளுக்கே
அத்திவாரமிடப்படுகின்றது.


ஜோதிரவி
மன்னார்.

## விடிவெள்ளி

எங்கள் இனத்தின் விடிவை நோக்கி
எழுந்தது இங்கே சாளரமும்
மங்கல் ஒளியில் நடந்த எமக்கு
மாபெரும் சுடராய் வந்ததுவே
பொங்கும் சுவையும் புதியகதையும்
பொதியக்கண்டோம் உன் மேலே
எங்கள் நன்றி என்றும் உமக்கே
ஏற்றுக்கொள்வாய் சாளரமே.

- செல்வி. சஜிதா கிருஸ்ணபிள்ளை
மீசாலை வீரசிங்கம் ம.வி

ஓவிய வாக்கிய பரிசுக் கவிதை



## இந்த மரம் ஏன் அழுகிறது

இந்த மரம் என்ன சொல்கிறது?
வெட்டுண்ட தன் வேதனையால்
வெதும்பி அழுகின்றதா?
வேண்டாம் என்னை விட்டுவிடு
என்று வேண்டி நிற்கின்றதா?
இல்லை. இந்தமரம்
தன்னை எண்ணிக் கலங்கவில்லை
எதிர்காலம் உணரா
மானுடனின் நிலை எண்ணி
அழுகிறது
''என்னை அழிப்பதால்
உன்னையே அழிக்கிறாய்,
எனச் சொல்லி குமுறுகிறது.

வ. கிருஷ்ணகுமார்
சாவகச்சேரி.

ஓவிய வாக்கியம் பகுதிக்கு வரும் கவிதைகள் மிக நீளமானதாக உள்ளன. தயவு செய்து ஆகக் கூடியது பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதி அனுப்பிவைத்தல் நன்று என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

□ □

# ஆபத்தான வாந்திபேதி நோயிலிருந்து மக்களைக் காப்போம்!

தற்போது எமது பகுதியில் காணப்படும் வாந்திபேதி (கொலரா) நோயை Vibrio Cholerae Non-1என அழைப்பர்.) ஆராய்ச்சியாளர்கள் இந்நோயை Serogroup 0139 எனவும் அழைக்கின்றார்கள். தென்கிழக்காசியாவில் பல நாடுகளில் தற்போது இந்நோய் காணப்படுகிறது.

அண்மையில் இந்நோய் யாழ்ப்பாண மாநகரசபையில் ஆரம்பித்து அதன் அயற்கிராமங்களாகிய நவாலி, கட்டுடை, இருபாலை, நாவற்குளி, கைதடி ஆகிய பகுதிகளில் பரவியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்நோய் எமது பிரதேசத்தில் எப்பகுதியையும் தாக்கமுடியும். அதுமாத்திரமல்லாமல் அடிப்படைச் சுகாதாரவசதிகள் குறைவான பிரதேசங்களில் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கவும் கூடும்.

## முக்கிய குறிப்புக்கள்

1) பாதிப்புக்குள்ளாகிய 10% இல் மாத்திரம்தான் முழு அளவிலான நோய்க்குரிய குணாதியங்களைக்காண முடியும். ஏனைய 90% ஆனவர்கள் நோய்க்காவிகளாக, எதுவித குணாதியங்களும் இன்றி நடமாடமுடியும்

2) பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடியாக வாய் மூலம் குடிப்பதற்கு நீராகாரம் கொடுக்க வேண்டியது அவசியம். சில சமயங்களில் ஊசிமூலமாக மருந்து ஏற்றவேண்டியிருப்பதனால் உடனடியாகச் சிகிச்சைக்கு வைத்தியசாலையை நாடுதல் வேண்டும்.

3) பாதிக்கப்பட்டவர்களில் ஒரு வீதத்தினர் (1%) தொடக்கம் ஐந்து வீதத்தினர் (5%) வரை இறப்பதாகவும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

4) கொலரா பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில், வயிற்றோட்டம் ஏற்படும் குழந்தைகளில், கூடுதலானோர் இறக்கும்நிலைமை ஏற்படமுடியும்.

5) இந்நோயின் முக்கிய பாதிப்பு யாதெனில், குடலில் உள்ளநீரும், ஜீவஉப்புக்களும் வெளியேறுவதனால் ஏற்படும் வரட்சியேயாகும். இந்நிலைமை உடனடியாகச் சீர்செய்யப்படல் வேண்டும். நீராகாரம் சரிவரக் கொடுக்காவிடின் மரணம் சம்பவிக்கமுடியும்.

6) தடை மருந்து கொடுத்தல், மக்கள் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்தல், மக்களை தடுத்துவைத்தல், இவைகள் மூலம் இந்நோயைத் தடுக்கமுடியாது.

7) நீண்டகாலத் திட்டங்களாகிய – திருப்திகரமான குடிநீர், மலகூடப்பாவனை, தனிநபர் சுகாதாரம் பேணல், நல்ல சூழலை உருவாக்குதல், இவைகள் மூலமே இந்நோயை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும்.

### 2) நோயரும்பும் காலம்:

சில மணித்தியாலங்களில் இருந்து 7 நாட்கள்

### 3) நோய் தொற்றும், முறைகளும் குணம் குறிகளும்.

நோயாளியின் மலத்தில் காணப்படும் கிருமிகள், குடிநீர், உணவு, கைவிரல்கள் இவைகள்மூலம். வாயினூடாகவே உட்செல்ல முடியும். கிருமிகள் பெருக்கம் அடைந்ததும் குணம் குறிகள் தென்படும்.

சாதாரணமாக ஆரம்பித்த வயிற்றோட்டம் ஓர் இரு தினங்களில் அதிதீவிரமடையும். மலத்தில் மணம் காணப்படமாட்டாது; அரிசி கழுவிய தண்ணீர் போலவும், இடையிடையே மலத்தில் சளித்தன்மை கொண்ட சிறு துண்டுகளும் காணப்படும். சில சமயங்களில் இம்மலம் மஞ்சள் நிறமாகவோ, அல்லது பச்சைகலந்த மண்ணிறமாகவோ காணப்படும்; சில சமயங்களில் இரத்தமும் காணப்படும்; (26 பக்கம் பார்க்க)

## ஓவிய வாக்கியம்



இந்த ஓவியத்திற்கு
பொருத்தமான கவிதை வரிகளை
எழுதி அனுப்புங்கள்.

மு. ஜசிதா,
கோண்டாவில் மேற்கு.

கே: அறிவுக்கொழுந்து பகலவன் அவர்களே 'பாலியல் வன்முறை' என்றால் என்ன? விளக்கமாகப் பதில் தருக.

ப: சம்மதமின்றி ஒருவரை இன்னொருவர் பலாத்காரமாக பாலியல் இச்சைக்குட்படுத்துவது பாலியல் வன்முறையாகும். (கற்பழிப்பு என்றும் இதனைக் கூறுவார்கள் ஆனால், 'கற்பழிப்பு' என்றபதம் சரியானதல்ல) 16 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணின் சம்மதத்துடன் பாலியல் உறவு கொண்டாலும் அதுபாலியல் வன்முறை என சர்வதேசச் சட்டம் கூறுகிறது. மனைவியாயினும் அவளின் விருப்பமின்றி கணவன் அவளை பலாத்காரப்படுத்துவதும் பாலியல் வன்முறையே. தொழில் நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் மேலதிகாரிகள்தமக்குக்கீழ் பணிபுரியும்பெண்களை அதிகாரத்தைப் பயன்படுத்தி இணங்கச்செய்தலும் பாலியல் வன்முறைதான்!

பா ஹேமா,
புத்தூர்.

கே. ஒவ்வொரு அரசாங்கங்களினது உணர்ச்சிகளும் செயற்பாடுகளும்ஒவ்வொருஅணுகுண்டுகளாக இருக்கிறதே ஏன்?

ப. இனவெறி அரசியல் வாதிகள் வாயைத்திறந்தாலும் வார்த்தைகள்ஒவ்வொன்றும் அணுகுண்டுகளாகத்தான் வெளிவருகின்றன. அண்மையில் சிறீலங்கா ஜனாதிபதி வடக்கு, கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதப்பிரச்சினைதான் என்று கூறியிருக்கிறார். இராணுவமும் இக்கருத்திற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. தமிழ்மக்கள்மீது இன்னும் அகோரமாக குண்டு மழை பொழிய படைக்கு உட்சாகமளிக்கப்பட்டுள்ளது.

ம. சதீஸ்குமார்,
இணுவில்.

கே. ஒரு மனிதனுக்கு திறமையா நேர்மையா இருக்க வேண்டியது அவசியம்?

ப. நேர்மையும், திறமையும் இணைந்திருக்க வேண்டியதுதான் மிகவும் அவசியம்; நேர்மையற்ற திறமை மனித இனத்தை அழிவுப் பாதைக்கே இட்டுச்செல்லும். திட்டமிட்டுக்கொலை, கொள்ளைகள் புரியவும், நாட்டுக்கு நாடு போதைப் பொருட்கள் கடத்தவும் கூடத்தான் திறமை அவசியம். இத் திறமை நேர்மையானதா? செயலைவிட அச்செயலுக்கு அடிப்படையான எண்ணமே முக்கியமானது.

# பகலவன் பதில்கள்

க. நிலாமதி,
கோப்பாய்.

கே. கலைவிழாக்கள், நாடகங்கள், தொலைக்காட்சி போன்றவை எமதுபிரதேசத்தில் இப்போர்க்கால சூழலில் தேவையானதுதானா?

ப. எமது மொழி, பண்பாடு என்பவற்றை வளர்ப்பதற்கும், மக்கள் மனங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமான கலைநிகழ்வுகள் கட்டாயம் தேவையானவைதாம். வீடியோ, தொலைக்காட்சி என்பனவும் இதற்கு உதவலாம். உளவியல் பாதுகாப்பிற்கும் இவை அவசியமானவை. எமது கலை, பண்பாட்டை சிதைக்காமல் எந்தவொரு நிகழ்வும் அமையவேண்டியது முக்கியமானது.

சி. அன்பரசி.
மல்லாகம்.

கே. சமூக அடக்குமுறை, ஆணாதிக்கம்போன்றவற்றிலிருந்துபெண்கள் விடுதலை பெற தங்களின் கருத்து என்ன?

ப. விடுதலையை துணிவுடன் போராடித்தான் பெறமுடியும். சமூகமும், ஆணாதிக்கமும் அமைத்துள்ள சிறையினைத் தகர்த்து பெண்கள் வெளியே வரவேண்டும். தடைகளை எல்லாம் தாண்டிக் கடக்கவேண்டும். இதனை அனைத்துப் பெண்களும் ஒருமித்துச்செயற்படுத்த வேண்டும். முதலில் பெண்கள் மத்தியில் இதற்கான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். பிற்போக்கான சமூகக்கட்டுப்பாடுகளை எல்லாப் பெண்களும் ஒருமித்து மீறும்போது யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அக்காலத்தில் உத்தியோகத்திற்கென வீட்டைவிட்டு வெளியே செல்லும் பெண்களை சமூகம் குறைவாகப்பார்த்தது. இன்று அதிகமான பெண்கள் தொழில் பார்க்கிறார்கள் எவரும் அவர்களை குறைவாகப் பார்ப்பதில்லை. அன்று ஓரிருபெண்கள் சைக்கிள் ஓடிப் பழகியபோது சமூகத்தினர் அவர்களைப் பிழை கூறியதை எனது காதாலேயே கேட்டிருக்கிறேன். இன்று தினசரி வாழ்க்கைத்தேவை கருதி வயது வித்தியாசமின்றி எல்லாப் பெண்களும் சைக்கிள் ஓடுகிறார்கள். யாரும் பிழை கூறுவதில்லை. இவை சிறு சிறு உதாரணங்கள். இதனைப்போல சகல விடயங்களிலும் பெண்கள் ஒருமித்து ஈடுபடும்போது. சமூகத்தடைகள் உடைட்டுப்போய் விடும். எமது தமிழீழத்துப்பெண்கள் மற்றைய பெண்களைவிட எவ்வளவோ முன்னேறி வருகின்றனர். ஆயுதமேந்தி ப்போராடும் அளவிற்கு வளர்ந்துவிட்டனர். எதிர்காலத்தில் முற்றுமுழுதான பெண்விடுதலையை எமது பெண்கள் வென்றெடுப்பார்கள் என நம்பிக்கை கொள்ளலாம்.

# மாவீரன் பண்டாரவன்னியன்



''பண்டார வன்னியனைத்
தோல்வியுறச் செய்யப்
பாரில் ஒரு சேனை
போதாது துரையே
கண்டார் கலங்கிடும்
காவலனை வெல்ல
கடிதினிலே மூன்று படை
கொண்டு செல்ல வேண்டும்''

என்று பண்டாரவன்னியனிடம் தோற்ற பிரித்தானியத் தளபதியான கப்டன் வொன்றி பெக். சேனாதிபதி யுபெலிடம் தெரிவித்ததாக பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

இங்கு பண்டாரவன்னியன் என்பவன் யார்? அவன் எந்தநாட்டின் மன்னன்? இவன் யாரை எதிர்த்துப் போரிட்டான்? என்ற கேள்விகள் எழும்பும். இதற்கு ஓரளவிற்கு விடை காண்பதாக அமைவதே இந்தச் சிறு கட்டுரையாகும்.

சர்வதேச அமைவிடம், வர்த்தக நலன் இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு 16 ஆம் நூற்றாண்டில் இருந்து மேலைத் தேசத்தவர்கள் இலங்கையை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என்ற வரிசையின் இறுதிப் பகுதியினராக பிரித்தானியரும் இருந்தனர். முன்னைய இரு அந்நியர்களும் கண்டி தவிர்ந்த பகுதிகளையும் பிரித்தானியர் கண்டி உள்ளிட்ட பகுதியையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

வன்னி இராச்சியமானது யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழ் திறை செலுத்திக் கொண்டிருந்தபோதும் தனியரசாக சுதந்திர அரசாக இருந்தது. இதே நேரம் கிழக்கிலிருந்த நாடு, காடு, போரதீவு, கொட்டியாரம் என்ற வன்னி அரசுகள் திறை செலுத்தாத ஆனால், யாழ்ப்பாண இராச்சியத்துடன் வர்த்தக, திருமண, கலாசார தொடர்புகளை வைத்ததோடு, பாதுகாப்பு அரசுகளாகவும் இருந்தன. இந்த நிலையில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தை தமது கட்டுப் பாட்டுக்குக் கீழ் கொண்டுவந்தனர். ஆனால் வன்னி இராச்சியம் அடி பணியவில்லை. திறை செலுத்தவும் இல்லை. இதே போலவே ஒல்லாந்தர் காலத்திலும் இருந்தன. பிரித்தானியர்களது ஆட்சிக்காலத்திலும் இந்த நிலை தொடர்ந்தது. அக்காலத்தில் வன்னி இராச்சியத்தின் எல்லைகளாக, வடக்கே யாழ்ப்பாணக் கடல், கிழக்கே திருகோணமலை, தெற்கே அருவியா, மேற்கே மன்னாரும் இருந்தன. இந்த இராச்சியத்தின் சுதந்திர மன்னனாக பண்டார வன்னியன் ஆட்சிசெய்து வந்தான்.

ஆனால், பிரித்தானியா வன்னி இராச்சியத்தின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பியது. திறை செலுத்துமாறு பணித்து தூதொன்றையும் வன்னிக்கு அனுப்பியது. இந்தத் தூதனை எதிர்கொண்ட பண்டார வன்னியன் திறை செலுத்த முடியாதென்றும், இது தமிழர்கள்வாழும் பூமி, இது அந்நியனுக்கு அடி பணியாது என்று பதில் சொல்லி அனுப்பினான். அதற்கு பிரித்தானியத் தூதுவன் ''திறை செலுத்தாவிடில் போர் செய்து உனது பகுதியை கைப்பற்றுவோம்'' எனக் கூறினான்

இதற்கும் அஞ்சாத பண்டார வன்னியன் பிரித்தானியருக்கு எதிராக பேர்ப்பிரகடனம் ஒன்றை அறிவித்தான். போருக்கான ஆயுதங்களை மேற் கொண்டான். போருக்கு அணிதிரளுமாறு வன்னி மக்களுக்கு அழைப்பு விடுத்தான்.

''அத்தனை பேரும்
படையெடுத்துப்
போர் தொடுத்தால் தான்
வந்தவர்களை
விரட்டலாம். வீட்டுக்கொரு
வீரர்
நாட்டைக் காக்க வந்தால்
ஓட்ட மெடுப்பர்
வெள்ளையர்''

என்று பண்டார வன்னியன்கூறியதாக நாட்டுப்பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

பிரித்தானியருக்கு எதிரான முதலாவது தாக்குதல் ஒன்றை நன்கு திட்டமிட்டு முல்லைத்தீவில் 1803 ஆம் ஆண்டு ஓகஸ்டு மாதம் 25 ஆம் திகதி பண்டார வன்னியன் நடத்துகிறான்.

அந்தத் தாக்குதலில் பிரித்தானியப் படை திசை தெரியாது சிதறியது. இந்தப் படைக்கு தலைமை தாங்கிய கப்டன் டிறிபேக் படைகளை இழந்த நிலையில் ஒரு சில சிப்பாய்களுடன் வள்ளங்களில் யாழ்ப்பாணம் தப்பினான். அங்கு சென்ற அவன் பிரித்தானிய சேனாதிபதியிடம் பண்டாரவன்னியனின்

வீரம், வலிமை, திறமை குறித்து தகவல் அளிக்கின்றான். பண்டார வன்னியனை எதிர்த்து வன்னி இராச்சியத்தைகைப்பற்ற வேண்டுமானால் மூன்று தரப்பிலிருந்தும் படைகளை அனுப்ப வேண்டும் எனக் கூறுகிறான்.

கப்டன் டிறிபேக்கின் தகவல்களின் அடிப்படையில் பிரித்தானிய தரப்பில் திட்டம் திட்டப்படுகின்றது. இதன்பிரகாரம் திருக்கோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் என்று மும் முனையில் இருந்தும் பிரித்தானியப் படைகள் வன்னியைச் சூழ்ந்துகொண்டன.

பண்டார வன்னியன் இந்தத் தாக்குதலை எதிர்கொள்ள தனது போர்த் திட்டத்தை வகுத்தான். தனது சகோதரிகளாகிய நல்லநாச்சன் வன்னிச்சி, ஊமச்சிய வன்னிச்சி ஆகிய இருவரையும் முறையே திருக்கோணமலை, மன்னார்ப்படைகளை எதிர்கொள்ள அனுப்பினான்.

பிரதான படை வரும் என்ற பகுதியினை யாழ்ப்பாண எல்லையில் பெரும் படையொன்றை அமைத்து பண்டார வன்னியன் நின்றான். கற்சிலை மடுவிலேயே பண்டார வன்னியனுக்கும், பிரித்தானியப் படைகளுக்கும் இடையேயான பெரும்போர் (பிரதான போர்) நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பிரித்தானியப் படைப் பிரிவு, பண்டாரவன்னியன் எதிர்பார்க்காத நேரத்தில் காட்டிக் கொடுப்போரின் உதவியுடன் தாக்குதலை நடத்தியது. இப் போர் பல நாட்கள் நடைபெற்றது. திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்காத போதும் பண்டாரவன்னியன் அதனை எதிர்க்க முகம் கொடுத்தான். போரில் கலந்து கொண்ட வன்னி வீரர்களின் குருதியினால் வன்னிமண் சிவந்தது. ஏராளமான வெள்ளையர்களின் தலை வன்னி மண்ணில் உருண்டது. இத்தனைக்கும் பண்டாரவன்னியன் கைகளில் வேலும், வீரவாளும்தான் இருந்தது. பிரித்தானியரிடம் நவீன பீரங்கிகள் நவீன துப்பாக்கிகள் இருந்தன. இறுதியில் எதிரியின் துப்பாக்கிச் சன்னம் சரமாரியாகப் பட்டு மயங்கிய நிலையில் பண்டார வன்னியன் கைது செய்யப்பட்டான்.

பண்டாரவன்னியன் கைது செய்யப்பட்டது தொடர்பாக முரண்பட்ட பலதகவல்கள் எழுந்துள்ளன. பண்டார வன்னியன் கைது செய்யப்பட்டானா? அவ்வாறு அவன் கைது யெய்யப்பட்டால் பின்னர் எவ்வாறு தப்பினான்? அல்லது அவன் கைது செய்யப்படவில்லையா? தப்பினரனா? என்பது போன்ற கேள்விகள் எழும்பியுள்ளன. ஆனால் இவற்றை அறிந்து கொள்வதற்கு போதுமான ஆதாரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை என்பதே துயரமானதாகும். இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவற்றைக் கூட அறிந்து கொள்வதற்கு சான்றாதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. ஆனால் ஏறத்தாள 200 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களை அறிய எம்மிடம் போதுமான ஆதாரம் இல்லை.

1811 இல் உடையாவூரில் பிரித்தானியருடனான போரில் காயமடைந்த பண்டார வன்னியனை அவனது தளபதிகள் தப்பவைத்தனர். இறந்தாலும் எதிரியிடம் பண்டார வன்னியனின் உடல் சிக்கக்கூடாது என்பதற்காகவே விழுப்புண் அடைந்த பண்டாரவன்னியனை தூக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் அவன் பனிக்காமத்தில் வீரச்சாவடைந்தான். அவ்வாறாகவே கற்சிலை மடுவிலும் பண்டாரவன்னியன் தப்பியிருக்கலாம் என ஊகிக்க இடமிருக்கிறது. ஆனால் இது குறித்து சரியான தகவல்களை அறிவதற்கு போதிய சான்றுகள் இல்லை என்பது கவலைக்குரியதே.

1803 இல் பிரித்தானியருக்கு எதிராக ஆரம்பமான போராட்டம் 1810 இல் மீண்டும் இவனால் நடத்தப்பட்டது. 1810 இல் இவன் அரச பதவியில் இல்லை. ஆனாலும் முயற்சியைக் கைவிடவில்லை. பதின்நான்கு வீரர்களை மட்டும் கொண்டிருந்த போதும், உறுதி தளராது மீண்டும் தாக்குதலை ஆரம்பித்தான்.

இவனது தாக்குதல் குறித்து பிரித்தானியர் அச்சமடைந்தனர். மீண்டும் தமது பாதுகாப்பினை பலப்படுத்திக் கொண்டனர். மூன்று பகுதிகளில் இருந்தும் படைகளை மீண்டும் பெற்றுக் கொண்டனர்.


1811 இல் உடையாவூரில்இருந்த பிரித்தானிய முகாம் ஒன்றின் மீது பண்டாரவன்னியன் தாக்குதல் நடத்தினான். அத்தாக்குதலில் காயமடைந்த அவன் அவனது தளபதிகளால் கூட்டிச் செல்லப்பட்ட போது அங்கு வீரச்சாவடைந்தான்.

இவனின் மறைவுடன், வன்னி இராச்சியத்தில், பிரித்தானியருக்குஎதிரான எதிர்ப்பும், மறைந்துவிட்டது. வன்னி மண்ணின் சுதந்திரத்திற்காக போராடிய தமிழ் மாவீரனாக, பண்டாரவன்னியன் திகழ்ந்தான். இவனது வீரத்தை எடுத்துக்கூறும் ஒரு சாதனமாக இவனை வென்ற பிரித்தானியத் தளபதி கற்சிலைமடுவில் எழுதிய வாசகமும் அமைகின்றது.

— உமா

# கோரீ என்றொரு தீவு

## அடிமை நிலையிலிருந்து மீண்ட அழகிய பிரதேசம்



கட்டிடக் கலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களைக் கொண்ட ஓர் இடமாக கோரீத் தீவு இன்று விளங்குகிறது. ஒரு வகை கூட்டிணைவான கட்டிடக் கலையை கோரீத்தீவு பாதுகாத்து வருகின்றது. அதில் பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் ஒருங்கிணைந்துள்ளன. கிறிஸ்தவ, இஸ்லாமிய, வடக்கத்திய மத்திய தரைப்பகுதிப் பண்பாடுகள் இதில் இணைந்துள்ளன.

புகுமுக மண்டபங்களை நோக்கி திறந்த காற்றோட்டம் மிக்க பெரிய அறைகள், முகப்பு மாடங்கள் துளைவு மாடங்கள் போன்ற சில அம்சங்கள் குடியேற்ற ஆதிக்காலத்தைச் சேர்ந்தவை. கரிய எரிமலைக்குழம்புப் பாறைகளைப் பயன்படுத்துதல், சுவர்களுக்கு சிவப்பு, மஞ்சள் நிறங்களில் வண்ணம் தீட்டுதல். வைக்கோல் கூரை வேய்தல் தட்டையான கூரைகளில் சிவப்பு ஓடுகள் வேய்தல் போன்ற ஏனைய அம்சங்கள் இயற்கையின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்டவை. இவை சுற்றுப்புறச்சூழலுடன் நன்கு ஒருங்கிணைந்துள்ளன.

1974இல் இந்தக்கட்டிடக்கலைப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான ஒரு விரிவான நடவடிக்கைத் திட்டத்தை பல ஆலோசனை நிறுவனங்கள் வகுத்துக் கொடுத்தன. கோர்ட்டாலா, சூடான், டியூகாடோங், விக்டோரியா ஆல்பிஸ் மாளிகை, வில்லியம்பாண்டி பள்ளி, கன்னிமார் அரங்கு, திறந்தவெளி அரங்கின் எஞ்சிய பகுதிகள், துறைமுகத்தலைவர் கட்டிடம் உட்பட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பத்து இடங்களைப் பாதுகாப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒருவகை தேசியத் தற்பண்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பண்பாட்டுத் திட்டமும் பரிந்துரைக்கப்பட்டது. இன்று அழகுடனும், கவர்ச்சியுடனும் தோன்றும் கோரீத்தீவின் வரலாறு மிகவும் சோகம் நிறைந்ததாகும்.

1444ம் ஆண்டு போர்த்துக்கீச கண்டுபிடிப்பாளர் டினிஸ்டையசின் தலைமையில் செனகல் ஆற்றினைக் கடந்தபோது, வெர்தே முனையில் ஆள்நடமாட்டமில்லாத 900 மீற்றர் நீளமும், 300 மீட்டர் அகலமும் கொண்ட ஓர் தீவினைக்கண்டனர். அதற்கு 'பால்மா' எனப் பெயரிட்டனர். கோரீத்தீவின் கொந்தளிக்கும் வரலாறுஅப்போதுதான் ஆரம்பமானது. அதன்பிறகு இதனுடைய நிர்வாகம்பதினேழுமுறை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாறியது.

முதலில் இத்தீவு போர்த்துக்கீச கப்பல்களுக்குத் துறைமுகமானது. பெர்னண்டோபோ, வாசுகோடகாமா, பிரான்சிஸ் சேவியர் சேமியோஸ் முதலான கண்டுபிடிப்பாளர்களுக்கும் தங்கிச்செல்லும் இடமாக இத்தீவு இருந்தது.

கோரீத்தீவு சிறியதாக இருந்தாலும் இதன்நிலம் எவ்வித விளைச்சல்களுக்கும் ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும் இங்கு குடியேறுவதற்கு எவரும் முன்வரவில்லை. ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுவியாபாரிகள் தங்களுடைய நீண்ட படகுகளை பழுதுபார்க்கும் இடமாக இதனைப் பயன்படுத்தினர். இதனால் இதற்கு 'நீண்ட படகுத்தீவு' என்று பெயரும் உண்டானது. 1558 ம் ஆண்டில் போர்த்துக்கீசரின் கடல்வழிச் செல்வாக்கு குறைந்தவுடன் டச்சுக்காரர்கள் இத்தீவை தன்வயப்படுத்தினர். அவர்கள் அப்போதிருந்த 'பால்மா' என்றபெயரை மாற்றி 'நங்கூரம் பாய்ச்ச நல்லஇடம்' என்ற பொருள்படும்படி கோடிரீடி' என்று பெயரிட்டனர் இந்தப் பெயர்தான் பின்னர் 'கோரீ' என்றானது. இத்தீவு இரண்டாம் உலகப்போர் முடியும்வரை பலரால் இராணுவத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. இரு கோட்டைகள் உருவாக்கப்பட்டன. இதனை ஆண்ட ஒவ்வொருவரும் கோட்டைகளை பலப்படுத்தி வந்தனர்.

டச்சுக்காரர்கள், போர்த்துக்கீசர், பிரெஞ்சுக்காரர்கள் இடம்பிடிக்கும் ஆசையில் போட்டியிட்ட போது வணிகத்தில் ஈடுபட்ட சிலர் கோரீத்தீவிலிருந்து

தங்கம், பசை, தந்தம் போன்றவற்றை விற்றுப்பணம் குவித்தனர். அதன் பின்பு இத்தீவு வணிகத்தின் கோட்டையானது. ஐரோப்பியர் வாங்குவதற்காக ஆபிரிக்காவின் பொருட்கள் இங்கு வந்து குவிந்தன. இத்தருணத்தில் அதிகபணம் தரக்கூடிய இன்னொரு கொடுமையான வியாபாரமும் நடந்தது. மக்களை அடிமைகளாக விற்பதுதான் அது.

ஆபிரிக்காவில் இது காலம் காலமாக நடந்து வந்த அநியாயமாகும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் அடிமைகளாக வடக்கிலுள்ள 'மெக்ரப்' போன்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஐரோப்பியர் வந்தபின் இத்தகைய அடிமைகளை அமெரிக்காவிற்கும் மேற்கிந்திய தீவுகளுக்கும் அனுப்பினர். 15 ம் நூற்றாண்டில் ஆபிரிக்க மக்களை போர்ச்சுகளுக்கு கப்பலில் அனுப்பிவைத்தனர். அங்கு அவர்கள் வீட்டு வேலைக்காரர்களாகவும், அடிமை வேலை செய்பவர்களாகவும் நடாத்தப்பட்டனர். அட்லாண்டிக் தீவுகள் கரும்பு உற்பத்திக்கு ஏற்றதாக இருந்ததால் நிறைய அடிமைகள் அங்கு தேவைப்பட்டனர். மக்களை அடிமைகளாக மறைமுகமாகக் கடத்தும் நிலைமாறி சில ஆபிரிக்க இளவரசர்களால் நேரடியாகவே அனுப்பும் வழக்கம் ஏற்பட்டது.

அடிமை வணிகம் செய்பவர்களின் ஆசையானது அளவற்றுச் செல்ல, அந்த அரை நூற்றாண்டிற்குள் போர்த்துக்கீசர் சுமார் 1,50,000 ஆபிரிக்க மக்களை அடிமைகளாககொண்டு சென்றிருக்கலாம் எனஎண்ணப்படுகின்றது. கப்பல் கப்பலாக அடிமைகளை கொண்டு வந்து கோரீத்தீவில் ஒன்றுசேர்த்து அங்கு வைத்தே அவர்கள் தரம்பிரிக்கப்பட்டனர். அடிமைகளான மக்களுக்கு இரும்புச்சங்கிலிகள் பூட்டப்பட்டு அச்சங்கிலியுடனேயே வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆபிரிக்கப் பெண்களும் குழந்தைகளும் சமையல் செய்யவும், வேறு வேலைகள் செய்யவும் பயன்படுத்தப்பட்டனர்.

அடிமைகள் மயக்கம் வரும்வரை வேலைசெய்விக்கப்பட்டனர். எதிர்ப்பவர்கள் தண்டிக்கப்பட்டனர். எதிர்க்கும் மக்களை அடையாளம் காண சூடான இரும்புக் கம்பியால் அவர்களது உடம்பில் சூடுவைத்தனர்.

கோரீத்தீவில் மனிதத்தன்மையற்ற விதத்தில் அடிமைகளை நடத்தியது சிலரைப் புரட்சி செய்யத் தூண்டியது. புரட்சிசெய்ய முன்வருவோர் கடுமையான தண்டனைகளுக்குளாக்கப்பட்டனர். மக்கள் இழிநிலையில் சிக்கித்தவித்தனர். அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இக்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணியது 19 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான். ஆபிரிக்காவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட அடிமை மக்களின் எண்ணிக்கை 1.5 இலிருந்து 3 கோடியாக இருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவர்களில் எத்தனைபேர் கோரீதீவு ஊடாக கொண்டுசெல்லப் பட்டனர் என்பதைப் பற்றிய எண்ணிக்கை சரிவரத் தெரியாவிட்டாலும் கோரீத்தீவு என்ற பெயரை கேட்டமாத்திரத்தில் ஓர் கசப்பான வரலாற்று ஞாபகம் மனதில் தோன்றும்.

1848ம் ஆண்டில் கோரீத்தீவானது அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்தது. 5000 மக்களைக் கொண்டிருந்த கோரீத்தீவு சுதந்திர இடமாக மாறியது. உலகெங்குமிருந்து ஆண்டு தோறும் 20,000 பார்வையாளர்கள் இங்கு வந்து செல்கின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள் கறுப்பு அமெரிக்கர்கள் இவர்கள் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்க கடற்கரையிலிருந்து தங்கள் மூதாதையர்கள் பயணம் செய்த இடத்தைப்பார்க்க ஆவலுடன் வருகிறார்கள்.

# பழைய கணனியை புதுப்பிக்க புதிய சாதனம்



பிரமின்காம் மசா சூசெற்சிலுள்ள 'விசேஜ்சின்க்' எனும் நிறுவனம் பழையவகை தனிப்பட்ட கணனியை புதிய தொடுகுறிக்கணனியாக மாற்றியமைப்பதற்குரிய சாதனம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இதன் பெயர் 'Touch - Mate' என்பதாகும். செய்திப் பரிமாற்ற இடங்களிலும் காசாளர் நிலையங்களிலும், வேறு தட்டச்சு முறைக்கணனிகள் பாவிக்கமுடியாத இடங்களிலும் இதனைப் பயன்படுத்தலாம். அமெரிக்காவில் இதன்விலை 895 டொலர்களாகும்.

தொட்டு இயக்கும் புதிய கணனியை பாவிக்க விரும்புகின்றவர்கள் தமது பழைய கணனியை ஒதுக்கவேண்டிய அவசியமில்லாமல் இச்சாதனம் உதவுகிறது.

# இரத்தம் ஒரே நிறம் ஆனால் எல்லா இரத்தமும் ஒரே இரத்தமா?

விரலில் கீறல் ஏற்பட்டு இரத்தம் வருகிறது. அது சிவப்பாகவும், ஈரத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கிறது. ஆனால் எல்லோருடைய இரத்தமும் ஒரே வகையைச் சேர்ந்ததல்ல. மனிதரின் இரத்தத்திலும் வேற்றுமைகள் உள்ளன. பலவகையான இரத்தங்கள் உள்ளன. நமது இரத்தத்தின் வகை நமது பெற்றோர்களையும் மூதாதையரையும் பொருத்தது. ஆகவே நமது இரத்தத்தில் நமது பரம்பரை புகுந்து குடி கொண்டுள்ளது. இரத்தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமையை வாழ்வுக்கும் சாவுக்குமிடையேயுள்ள வேற்றுமையுடன் ஒப்பிடலாம்.

ஏன் இந்த வேற்றுமை? காரணம் இதுதான். இரத்தத்தின் சிவப்பு உயிரணுக்கள் (Red blood cells) உடலின் பாதுகாப்பு ஏற்பாட்டுடன் இணைந்தவை. அவற்றில் தனித்தன்மை வாய்ந்த வேதியியல் பொருள்கள் அடங்கியிருக்கின்றன. உயிர் காக்கும் மூலப் பொருள்களாகும். (Antigems) அவை உடலின் நோய் எதிர்ப்புப் பொருட்களின் (Antibiotics) உற்பத்தியைக் கண்காணிக்கின்றன. மருத்துவ ஆய்வாளர்கள் இரத்தத்தை 200 தொகுதிகளாகப் பிரித்துள்ளனர். உடலில் உற்பத்தியாகும் நோய் எதிர்ப்புப் பொருள்களின் வேறுபாடுகளுக்குத் தகுந்தவாறு அவர்கள் இந்தக் தொகுதிகளை ஏற்படுத்தியுள்ளனர். நோய் எதிர்ப்புப் பொருள்கள் பெரும்பாலும் தேவை ஏற்படும்போதே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் அந்தப் பொருட்களில் சில இயல்பாகவே விளைகின்றன. அவை இரத்தத்தில் எப்போதுமே இருக்கின்றன.

பலவகை இரத்தங்கள்:

இரத்தத்தில் பலவகைகள் உள்ளன என்பதை அறியாமல் நோயாளிகளுக்கு இரத்தம் செலுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு இரத்தம் செலுத்தப்பட்ட பிணியாளர்களில் சுமார் பாதிப்பேரின் நிலைமை மோசமாயிற்று. பெரும்பாலும் அவர்கள் இறந்தனர். பிறகு ஆய்வுகள் நடைபெற்றன. இரத்தத்ததில் பல வகைகள் உள்ளன என்பது தெரிய வந்தது. வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த இரத்தத்தை ஒன்றாகக் கலந்தால் என்ன ஏற்படுகிறது என்று பார்ப்போம். ஒருவகை இரத்தத்தின் ஒரு சொட்டு, அதற்கு மாறுபட்ட மற்றொரு வகையான இரத்தத்துடன் சேர்க்கப் பட்டால் இரத்த உயிரணுக்கள் ஒரே திரளாக ஒன்று சேர்ந்து கெட்டியாகி விடுகின்றன. இந்த நிலைக்கு இரத்த அணு ஒட்டுத்திறன் (Aggluti nation) என்று பெயர்.

இரத்த உயிரணுக்கள் ஒன்று சேர்ந்து கெட்டியாகி 'ஒட்டுத் திறன்' நிலை ஏற்படும்போது அவை அழுந்தி விடுகின்றன. எனவே இரத்தத்தை வகைப் படுத்திப் பார்ப்பது மிகவும் அவசியமாகிறது. இந்த அணுக்கள் ஒரே திரளாகக் கெட்டியாகாமல் இருக்க வேண்டும். இந்த விதிமுறையைப் பின்பற்றி இரத்தத்தை 4 வகைகளாகப் பிரித்துள்ளனர். அவை முறையே 'O, A, B, A, B' எனப்படும். 'O' வகையைச் சேர்ந்த இரத்த அணுக்கள் வேறு வகையைச் சேர்ந்த இரத்த அணுக்களுடன் ஒரே திரளாகச் சேர்ந்து கெட்டியாகாது. இதன் பொருள் என்ன? இந்த 'O' வகையைச் சேர்ந்த இரத்தத்தைத் தேவைப் படும் எந்தப் பிணியாளருக்கும் செலுத்தலாம். இந்த இரத்தம் உடையவர்கள் 'எல்லோருக்கும் கொடையாளிகள்' (Universal donors) என்று அழைக்கப்படுகின்றனர். AB, வகையைச் சேர்ந்த இரத்தம் உடைய பிணியாளர்களுக்கு வேறு வகைகளைச் சேர்ந்த இரத்தம் உடையவர்களிடமிருந்து 'இரத்ததானம்' பெறலாம். அல்லது இரத்தம் செலுத்திக் கொள்ளலாம். ஏனெனில் இவர்களுடைய இரத்த அணுக்கள் வேறு வகை இரத்த அணுக்களுடன் ஒட்டிக் கொண்டு கெட்டியாகமாட்டா.

இரத்த வகைகள் நாட்டிற்கு நாடு வெவ்வேறு விதமாக இருக்கின்றன. மேல் நாடுகளில் 'A' வகை இரத்தத்தைச் சேர்ந்தவர்கள் கணிசமாக உள்ளனர். கீழ்த்திசை நாடுகளில் இந்த இரத்தம் உள்ளவர்கள் குறைவு. ஆனால் 'B' வகை இரத்தம் உடையவர்கள் அதிகம். உதாரணமாக இங்கிலாந்தில் 43 சதவிகித மக்கள் 'A' பிரிவு இரத்தம் உடையவர்கள். ரஷ்யாவில் 30 சதவிகிதம் மக்கள் 'A' பிரிவு இரத்தம் உடையவர்கள். இந்தியாவில் இந்த இரத்தம் உடையவர்கள் 15 சதவிகிதமாகும்.

பாண்டியன்தாழ்வு பேக் கவுஸ்

பாண்

பணிஸ்

கேக்

ஐசிங் வேலைகள்

நினைத்தால்

நாவில்

சுவையூறும்

ஓடர் வேலைகள்

குறித்த நேரத்தில்

செய்து தரப்படும்

# பாண்டியன்தாழ்வு பேக் கவுஸ்

கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு.

"கந்தையருக்கு அடிச்சதெல்லோ குருசந்திர யோகம்".

"என்ன செல்லையா? கந்தையரைப் பற்றின கதையோட வாறீர்."

"கந்தையரும் பெண்சாதியும் ஜெர்மனியிலை மகளோடை போய் இருக்கினமெல்லே வாத்தியார், இனி இஞ்சை வரமாட்டினமாம், தம்பியாருக்குப் படமும் அனுப்பிக் காயிதமும் எழுதியிருக்கிறார் கந்தையர், டிலை ஒரு ஆபிரிக்கரைக் கொலை செய்தாங்கள். தொடர்ந்து வெளிநாட்டாரைத் தாக்கிக்கொண்டு வந்திருக்கிறாங்கள். போனவருசம் மாத்திரம் 1900 தாக்குதல்களை நடத்தியிருக்கிறாங்கள். பதினாறு சம்பவங்களிலை கொலை செய்திருக்கிறாங்கள். இவ்வளவும் நடக்கேக்கை அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு தானே இருந்தது. அப்ப ஏன் தடைசெய்யயில்லை? நவம்பர் மாதம் அந்தத் துருக்கிக் குடும்பத்தின்ரை வீட்டுக்கு நெருப்பு வைச்சதைத் தொடர்ந்து எல்லா நாடுகளிலும் இந்த விசயம் கவனத்துக்கு எடுக்

# சொந்த நாடே சொர்க்கம்

படத்திலை பாத்தன் மனிசனும் மனிசியும் நல்ல சோக்காக இருக்கினம்."

"இஞ்சை வராமல் ஜெர்மனியிலை இருக்கிறது குருசந்திரயோகமோ?."

"இஞ்சை உந்த அடிபுடி சண்டையளுக்கை அகப்படாமல் அங்கை நிம்மதியாகச் சீவிக்கிறது குருசந்திரயோகம்தானே."

"அங்கை தான் நின்மதி ஆகக்குறைவு. அந்தத் துருக்கிக் குடும்பத்துக்கு நடந்ததைப்போலை எப்ப வீட்டோடை சேத்து எரிப்பங்கள் எண்டு ஏங்கிக் கொண்டு இருக்கவேணும்."

"அதென்ன வாத்தியார்?"

"வடிவேலு பத்திரிகையளிலை படிக்கேல்லைப் போலை, ஒரு துருக்கிக் குடும்பத்தின்ரை வீட்டுக்கு நெருப்பு வைச்சிட்டாங்கள், மூண்டுபேர் எரிஞ்சு செத்துப் போச்சினம்."

"உந்த வேலையை ஆர் செய்தது?"

"தேசிய முன்னணி எண்டு ஒரு அமைப்பு இருக்குது. ஹிட்லரின்ரை நாஸிக் கொள்கையைப் பின்பற்றுகிற ஆக்கள். வெளிநாட்டார் வந்து ஜெர்மனியின்ரை புனிதத்தைக் கெடுக்கினம் எண்டதும், வெளிநாட்டாரைக் கலைக்கவேணும் எண்டதும் அவங்கடை கருத்து. அவங்கள் தான் உப்பிடியான வேலையள் செய்யிறது."

"அரசாங்கம் அதுக்கு விட்டுக்குடாது வாத்தியார், இப்ப தேசிய முன்னணியைத் தடை செய்திருக்குதுதானே."

"தடை செய்திருக்குதுதான் கனகேந்திரம், எப்ப தடை செய்தது? ஏன் தடைசெய்தது? ஏன் முன்னமே தடைசெய்யயில்லை?தேசிய முன்னணியின்ரை நடவடிக்கையள் 1990 ம் ஆண்டே ஆரம்பிச்சிட்டுது. அந்தஆண்

கப்பட்டது. ஜெர்மனியிலையும் வெளிநாடுகளிலையும் இருக்கிற மனிதஉரிமை அமைப்புகள் ஆர்ப்பாட்டமும் செய்து கோரிக்கையும் விட்டதுக்குப் பிறகு தான் அரசாங்கம் தடையுத்தரவைப் பிறப்பிச்சது. ஜெர்மன் அரசாங்கம் இரட்டை வேஷம் போடுது எண்டுதான் நான் நினைக்கிறன்."

"என்னமாதிரி இரட்டை வேஷம்?"

"இப்ப அரசியல் தஞ்சம் கோரிக்கொண்டும் அகதியளாகவும் 60 லட்சம் வெளிநாட்டார் ஜெர்மனியிலை இருக்கினம் அரசாங்கத்துக்கு இவை ஒரு தலையிடி. இவையை வலுக்கட்டாயமாக வெளியேற்ற அரசாங்கம் விரும்பாது. அதாலை பயப்படுத்தி வெளியேற்றிற நடவடிக்கையளுக்கு மறைமுகமாக ஊக்கம் குடுத்துக்கொண்டு அந்த நடவடிக்கையளைக் கடுமையாக எதிர்க்கிறமாதிரி உலகத்துக்குக் காட்டிக்கொள்ளுது."

"ஜெர்மன் நாட்டு அரசியல் சாசனத்திலை வெளிநாட்டவைக்கு அடைக்கலம் குடுக்கவேணும் எண்டு சொல்லியிருக்கல்லோ வாத்தியார்."

"சொல்லியிருக்குதுதான் கமலநாதன். அது 16 வது சரத்து இந்தச் சரத்து அரசியல் சாசனத்திலை சேர்க்கப்பட்ட உண்மையான நோக்கம் வேறை சோஷலிச நாடுகளிலையிருந்து மக்களைக் கவர்ந்திழுத்து அந்த நாடுகளைப் பலவீனப்படுத்துறது தான் அந்த நோக்கம். இப்ப சோசலிஷ முகாம் குலைஞ்சிட்டுது. நிலைமை மாறியிட்டுது. அதாலை 16 வது சரத்தைத் திருத்திறதுக்கான நடவடிக்கையும் தொடங்கியிட்டுது."

"ஜெர்மனி வெளிநாட்டாரிலைதான் பொருளாதார வளர்ச்சிக்குத் தங்கியிருக்குது எண்டு சிலர் சொல்லுகினம். அதுசரியோ

## வாத்தியார் வீட்டு விறாந்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளைப் பூண்டின் மருத்துவக் குணங்கள்

உள்ளி, பூடு என்றெல்லாம் எம்மால் அழைக்கப்படும் வெள்ளைப்பூண்டு சிறந்த மருத்துவக்குணங்களடங்கிய ஓர் மூலிகை ஆகும். மிகப் பழங்காலத்திலிருந்தே உணவில் பயன் படுத்தப்பட்டுவந்த வெள்ளைப்பூண்டானதுகடந்தசுமார்ஐயாயிரம் ஆண்டுகளாக பல நோய்களைத்தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இடைக்காலத்தில் பூண்டின் குணங்கள் குறித்து நிறைய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. மனிதருக்கு ஏற்படுகின்ற மூச்சுத்திணறல் ஆஸ்த்துமா போன்ற நோய்களுக்கு பூண்டு நல்ல மருந்து என உறுதி செய்யப்பட்டுள்ளது. இதய நோய்க்கு பூண்டு சிறந்த மருந்தாகவும் கருதப்படுகிறது.

முதலாவது உலகப் போரின் போதுதான் வெள்ளைப் பூண்டின் முக்கியத்துவத்தை முழுமையாக கண்டறிந்தனர். யுத்தகாலத்தில் காயமுற்ற, நச்சுப் பொருட்களினால் பாதிப்புற்ற வீரர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதில் முக்கிய பங்கினை வெள்ளைப்பூண்டு வகித்தது. இதில் உள்ள அலிசின் (ALLICIN) என்ற பொருள் கிருமி நாசினியாகவும், புண்களில் தோன்றும் எரிச்சலைத்தணிக்கும் மருந்தாகவும் பயன் படுகின்றது.

இரத்த நாளங்களிலும் தமனிகளிலும் ஏற்படுகின்ற கொழுப்பை (கொலஸ்ட்ரால்) குறைக்கின்ற தன்மை பெற்றிருப்பதால் இதய நோய்க்கும் வெள்ளைப்பூண்டு நிவாரணம் அளிக்கிறது. இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் குறைதல், ஆஸ்த்துமா, நீரிழிவு, இரத்தக்கட்டி ஏற்படுதல் இரத்த அழுத்தம் முதலிய நோய்களுக்கும் பூண்டு மருந்தாகிறது. இம் மருத்துவக் குணங்களைக் கொண்ட வெள்ளைப்பூண்டில் ஊட்டச் சத்து (VITAMIN) என்பது எதுவும் கிடையாது. வெள்ளைப்பூண்டின் மணம் சற்று வித்தியாசமானதால் நாம் உணவுடன் சமைத்து உண்கிறோம்.

உடலில் காயம் ஏற்பட்டால் வெள்ளை பூண்டை அரைத்து காயத்தில் வைத்துக்கட்டினால் புண் விரைவாக ஆறிவிடும். பூண்டை அரைத்து தண்ணீருடன் சேர்த்து தெளித்தால் கிருமிநாசினி போன்று பயன்படும்.

ஆதாரம் – 'கெல்த்'

## சொந்தநாடே சொர்க்கம்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி......

வாத்தியார்?''

''முழுக்கச் சரி எண்டு சொல்ல ஏலாது. ஜெர்மனியின்ரை மொத்தத் தேசிய உற்பத்தியிலை பத்து வீதம் வெளிநாட்டவையின்ரை நேரடியான உழைப்பு, வருசத்துக்குக் கிட்டத்தட்ட மூண்டு லட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர் ஜெர்மனிக்குத் தேவைஎண்டு அந்த நாட்டு வர்த்தக மையம் சில காலத்துக்கு முதல் கணிப்பீடு செய்தது."

"அப்பிடியெண்டால் வெளிநாட்டவரை ஜெர்மனி வரவேற்கவேணுமல்லோ.''

''இதைக் கொஞ்சம் ஆழமாகப் பார்க்க வேணும். பெர்லின் சுவர் கட்டப்படுகிற வரைக்கும் கிழக்கு ஜெர்மனியிலையிருந்து ஏராளம் பேர் மேற்கு ஜெர்மனிக்குப் போய்க்கொண்டிருந்தினம், வெளிநாட்டுத் தொழிலாளருக்கான தேவையை இவை பூர்த்தி செய்தினம். பெர்லின் சுவர் கட்டினபிறகு இந்தத்தொகை நல்லாகக் குறைஞ்சிட்டுது. அதாலை, வெளிநாட்டுத் தொழிலாளருக்கான தேவையைப் பூர்த்தி செய்யிறதுக்கு வேறை நாடுகளிலை இருந்து ஆக்கள் தேவைப்பட்டினம். இப்ப இரண்டு ஜெர்மனியும் ஒன்டாக இணைஞ்சாச்சுது. கிழக்கு ஜெர்மனியிலை வேலை இல்லாமல் கனபேர் இருக்கினம். வெளிநாட்டுத் தொழிலாளருக்கான தேவையை அவையாலை பூர்த்தி செய்ய ஏலும்.''

"அப்ப ஜெர்மனி வாழ்க்கை எனிமேல் சங்கடமாகத்தான் இருக்கும் எண்டு சொல்லுங்கோ."

''ஜெர்மனி வாழ்க்கை மட்டுமில்லைச்செல்லையா, வெளிநாடுகள் எல்லாத்திலையும் காலப்போக்கிலை இந்த நிலமைதான் வரும். உழைக்கிறதுக்காக வெளிநாட்டுக்குப் போகலாம். ஆனா வாழுறத்துக்குச் சொந்த நாட்டுக்குத்தான் வரவேணும்.''

— ஞானகுரு —

● ஒரு சுற்றுச்சூழல் கவிதை

# எச்சம்

ஒரு வாகன உற்பத்தியாளன்
பூமியைப் பிளப்பவன்
காகிதத் தயாரிப்பாளன்
பாறை உடைப்பவன்
கசாப்பு வெட்டுபவன்
இரும்பு இளக்குபவன்
மீன் பதப்படுத்துபவன்

ஆகியோரின் கனவுகள்
இயற்கையின் கனவைவிட
'மாற்று'க் குறைந்தது
என்று யார் கூறுவது?

''நாங்கள் இல்லாது நீங்கள் வாழ இயலாது''
அவர்கள் இறுமாப்புடன் கூறுகின்றனர்.
"உங்களோடு சேர்ந்து வாழவும் முடியாது"
அமைதியைக் கிழித்துக் கொண்டு வருகிறது பதில்.

உலகத்தின் வளத்தினிடையே
மௌனமாக
பஞ்சம் கால் நீட்டிப் படுத்திருக்கிறது.
ஒட்டி உலர்ந்த குழந்தையின் பசிக்குரல் போல
அதுதீனமாக ஒலிக்காதுதான்
ஆனால் அதற்காக அதன் கொடூரத்தை
குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.
ஒருநாள்
அது விசுவரூபமெடுக்கும்
உலகம் முழுவதையும் தன்காலடியில் போட்டு நசுக்கும்
குரூரமாகச் சிரிக்கும்.
சுரங்கங்கள் சுரண்டி மூடிக்கப்பட்டிருக்கும் போது,
காட்டு மரங்களின் அடித்தண்டுகள்
கல்லறைக் கற்களாக மாறி இருக்கும்போது,
கடைசிப் புள்ளிமானும் ஒரு சோடிக் காலணிகளாக
உருமாறி இருக்கும் போது,
செத்த மண்ணில் பூவின் விதைக்காக
ஒரு சிட்டுக்குருவி அலைந்து தவிக்கும்போது,
ஓங்கி வீசும் புழுதிக்காற்று
நிலத்தை மூடி விழுங்கிக் கொண்டிருக்கும்போது,
அந்தப்பச்சை ஏரியின் குழப்பிய சேறு
கடைசிக் கொக்கையும் பிடித்திழுத்து சுருட்டிக்கொள்ளும்போது
இயற்கையை விட மனிதன்
'மாற்று'க் குறைவாகவே கனவுகளைக்கண்டு கொண்டிருந்தான்
என்று கூற யார் மிஞ்சி இருப்பார்?

நா. இராஜேஸ்வரன்
யா/கம்பர்மலை அ. த. க. பாடசாலை, கம்பர்மலை.

● தமிழீழம் கிடைத்தால் எதிர்காலத்தில் யாழ்குடாநாடு எப்படிக் காணப்படும்? மக்கள் எப்படி வாழ்வார்கள்?

இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள ஒரு சுதந்திர நாட்டின், பொன் விளையும் பிரதேசமாகக் காணப்படும். அங்கு வாழும் மக்கள் சுதந்திரப் பிரஜைகளாகவும், தன்னிறைவுள்ளவர்களாகவும் வாழ்வார்கள்.

இ. செல்மர் எமில், ஊர்காவற்றுறை.

● மூளை இல்லாத உயிரினங்கள் உலகில் வாழ்கின்றனவா?

எமில்!... மூளை என்று நீங்கள் குறிப்பிடுவது, நரம்புத் தொகுதியின் செயல்பாட்டையே குறிக்கும். உலகில் வாழும் சிக்கலான அங்கிகளிடையே விருத்தியடையாத நரம்புத் தொகுதியில் இருந்து, மனிதன் போன்ற நன்கு விருத்தியடைந்த நரம்புத் தொகுதிவரை உண்டு. மைய நரம்புத் தொகுதியின் ஒரு முக்கிய கூறே மூளை. ஆனால் சில எளிமையான ஒரு சில அங்கிகளில் நரம்புத் தொகுதி இல்லை. உதாரணமாக அமிபா, பரமிசியம், வைரசு, போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய விலங்குகளில் மூளையின் செயல்பாட்டினால் விளையும் தூண்டல்கள் நடைபெறுவதில்லை.



ச. வதனி, வல்வெட்டித்துறை.

● தலைவலிகளில் 'மைக்கிறேன்' என்னும் தலைவலி தாங்க முடியாது என்று பேசப்படுகிறது. இதுபற்றிய விளக்கம் தரவும்?

'மைக்கிறேன்' என்று சொல்லப்படும் ஒற்றைத் தலைவலியானது, தலையின் நெடுங்கோட்டுப் பகுதியின் ஒரு பக்கத்திலோ அல்லது மாறிமாறி இருபக்கத்திலுமோ வரக்கூடும் இதற்கு முக்கிய காரணம், நமது மூளையினுள் உள்ள நாளங்கள் சுருங்கும் பொழுதும், விரியும் பொழுதும் உண்டாகும் குருதி அமுக்கம் காரணமாக நரம்பு முனைகள் துடிப்பதால் தாங்கமுடியாத தலைவலி உண்டாகின்றது. அந்தச் சமயங்களில், தலைச் சுற்று, நிதானமின்மை, மங்கலான பார்வை, வெள்ளைப் புள்ளிகள் போன்ற தோற்றம், வாந்தி, அதிகமாக வியர்த்தல், ஆகியவை ஏற்படும். இவ்வாரம்ப அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும்போதே ஏர்கோடமின், குரோசின், மெடாசின் போன்ற தலைவலி மாத்திரைகளில் ஒன்றையும், தூக்க மாத்திரை ஒன்றையும் உட்கொண்டு இருட்டான அறையில் கண்களை மூடி ஓய்வெடுக்க வேண்டும்.

இந்த ஒற்றைத் தலைவலிக்கு, பிரகாசமான ஒளி, அதிக இரைச்சல், காய்ச்சல், மலச்சிக்கல், சனக்கூட்டம் நிறைந்த இடம், ஒழுங்கற்ற உணவு நேரம் போன்றவையும் காரணமாக இருக்கலாம். இப்படியானவர்கள் கோப்பி, கொக்கோ, சொக்கலேற், கேக் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். இவற்றில் உள்ள தைரொமின் என்னும் இரசாயனப் பொருள் குருதி நாளங்களைச் சுருங்க வைக்கும். மேலும் சிகரட் புகைத்தல் தலையில் முழுகுதல் போன்றவற்றையும் தவிர்த்தல் வேண்டும். வதனி!... தலைவலி என்பது பல நோய்களில் அறிகுறியாகும். அடிக்கடி தலைவலி வருபவர்கள் தகுந்த வைத்தியரிடம் சிகிச்சை பெறவேண்டும்.

க. கல்பனா
யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம்,
வல்வெட்டித்துறை.

● காலை, மாலையிலும் விட நண்பகலில் சூரியன் சிறிதாகத் தென்படுவது, எமது கண்ணில் உள்ளஏதாவது காரணமா அல்லது வேறு ஏதாவது காரணமா?

கல்பனா!... இது கண்களின் பார்வையில் ஏற்படும் ஒருமாறு நிலைத்தோற்றமே ஒழிய சூரியனின் வடிவத்தில் அல்ல. காலையிலும், மாலையிலும் சூரியனை நோக்கும்போது அதனால் ஏற்படும் பார்வைக் கோணம் 30°யிலும் சிறிது குறைவாக இருக்கும். நண்பகலில் சூரியன் உச்சியில் நிற்கும் பொழுது செங்கோணத் திசையில் இருக்கும். இங்கு பார்வைக்கோணம் பூச்சியமாக அல்லது மிகச்சிறிதாக இருக்கும். இதனால் ஏற்படும் பார்வைக்கோணம் சிறிதாக இருப்பதால் சூரியன் உச்சியில் வரும்பொழுது சிறிதாக இருக்கும். சூரியன் சரிந்து அடிவானங்களில் காணப்படும் போது பார்வைக்கோணம் அதிகரிப்பதால் சூரியன் பெரிதாகத் தோற்றமளிக்கின்றது. விமானத்தளத்தில் அருகே நிற்கும் விமானம் பெரிதாகவும், மேலேபறக்கும் பொழுது சிறிதாகத் தோன்றுவதும்; அருகில் உள்ள தந்திக் கம்பங்கள் பெரிதாகவும், தூரத்தில் உள்ள தந்திக் கம்பங்கள் சிறிதாவும் இருப்பனபோல் தோன்றும். தோற்றப்பாடுகள் கூட பார்வைக் கோணங்களின் வேறுபாட்டினாலேயே ஏற்படுகின்றன.

ஐ. குணேஸ்வரன்,
கெருடாவில், தொண்டமனாறு.

● வீனஸ் என்று அழைக்கப்படும் கிரகத்தைப் பற்றிச் சிறிது கூறுங்கள்?

சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் மிகப் பிரகாசனானது "வெள்ளி" என அழைக்கப்படும், வீனஸ் கிரகமாகும். இது சூரியனில் இருந்து ஒளியைப் பெற்று 67% ஒளியைப் பிரதிபலிக்கின்றன. என்று 'க்விப்பர்' என்ற விஞ்ஞானி கூறியுள்ளார். இக்கோள் ஏறக்குறைய பூமியைப் போன்றதே. சூரியனுக்கும் இதற்கும் இடையிலான தூரம் ஏறக்குறைய 67275000 மைல்கள் சூரியனை 225 நாட்களில் சுற்றிவருகின்றது. மேகங்களினால் சூழப்பட்ட வளி மண்டலம் இக்கோளைச் சூழ்ந்து காணப்படுகின்றது. இதன் நிறை அண்ணளவாக 5,890 000, 000, 000, 000,000, 000மைல்கள் (இதனை வாசிக்க வேண்டியது உங்களைப் பொறுத்தது.) வீனசின் விட்டம் 7660 மைல் இதன் கனவளவு பூமியின் கன அளவிலும் 88%. இக்கோள் பெருமளவுக்கு பூமியின் இயல்பை ஒத்துக் காணப்படுவதால், இங்கும் உயிரினங்கள் சற்று மாறுபட்ட அமைப்பில் வாழக்கூடும். இது மிகவும் பிரகாசமான கோள் என்பதால், காலையில் கிழக்கு வானிலும், மாலையில் மேற்கு வானிலும் பிரகாசமாகவும் வெண்மையாகவும். ஒளிர்ந்து கொண்டிருக்கும் இதனாலேயே காலையில் இது விடிவெள்ளி என்றும் பிற்பகலில் மாலைவெள்ளி என்றும் அழைக்கப்படுகின்றது. இதற்கு உபகோள்கள் சந்திரன்கள் இல்லை. இந்தக் கிரகத்தைப்பற்றிய விரிவான ஆய்வுகள் நடத்தமுடியாது இருப்பதற்கு வெள்ளியைச் சூழ்ந்திருக்கும் வெண்மையான வழி மண்டலத்தின் மேல் சிலவேளை இருண்ட மேகங்கள் தோன்றுதல், வளி மண்டலத்தின் மேற்பரப்பில் செறிந்துள்ள அதிகமான காபநீரொட்சைட்டு (அதாவது பூமியைவிட 10,000 மடங்கு அதிகம்) என்பன தடையாக இருக்கின்றன.

சி. லதா,
இரும்பு மதவடி, கரவெட்டி.

● ஆண்களா பெண்களா அழகானவர்கள்?

லதா!... நீங்கள் அழகு என்று எதனைக் குறிப்பிடுகின்றீர்கள் என்பது புரியவில்லை. அறிவியல் ரீதியில் அழகு என்பது இதுதான், இப்படித்தான் இருக்கும் என்று வரையறை செய்யமுடியாது. இன்று ஆடை, அணிகலன்களாலும், அலங்கார சாதனங்களினாலும் மனிதர்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்கின்றனர். ஆனால் இயற்கையில் ஆண்மையில், ஆண்சிங்கம், சேவல், போன்ற விலங்குகளின் ஆண்இனம் அழகானவையல்லவா?

# பயன்தரு குறிப்புகள்

☐ மூலகங்களுக்குப் பெயரிடும் முறையை முதன் முதலில் ஏற்படுத்தியவர் லினேயஸ். இவர் பெயரிடும் முறையில் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தினார். இவற்றுள் சில நாட்டின் பெயரிலான மூலகங்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டு, அந்த நாடுகளின் முதல் இரு எழுத்துக்களைக் கொண்டு அவற்றின் குறியீடுகள் இடப்பட்டுள்ளன.

அமெரிஷியம் (Am), பிரான்சிஷியம் (Fr),
ஜெர்மேனியம் (Ge), பொலோனியம் (Po)

☐ ஒரு முழு அளவிலான அணுப் போரின்போது, ஏற்படும் வெடிப்பினாலும், தீச்சுவாலைகளினாலும் இலச்சடக்கணக்கான தொன் நிறையுள்ள தூசுகளும், காபனும், புகையும், பூமியைச் சூழும். இதனால் பூமியின் மேற்பரப்பின்மீது விழும் சூரிய சக்தியின் அளவு மிகக் குறையும். கடுங் குளிரும், இருளும் பூமி முழுவதும் காணப்படும். இதன் விளைவாகப் பூமியின் வெப்பச் சமநிலை குழப்பமடையும். இந்த அணுப்போர் கார்காலத்தில் (Nuclear Winter) தப்பிப் பிழைப்பவர்கள் இருள் மயமான கடுங்குளிரை ஏறத்தாழ ஓராண்டுக்கு மேல் எதிர்நோக்கவேண்டியிருக்கும் என விஞ்ஞானிகள் கணிப்பிட்டுக் கூறியுள்ளனர்.

☐ APPLE (அப்பிள்) என்பது ஒரு பழம் அல்ல, ஒரு செயற்கைக் கோள். உலக வரை படத்தில், இந்தியாவுக்கு மேலே, விண்வெளியில் நிலையாக நிற்கும்படி சுற்றிவர அனுப்பப்பட்ட முதல் சோதனை தொலைத் தொடர்பு கோள் APPLE ஆகும். இதன் விரிவு — ARIANE PASSENGER PAY LOAD EXPERIMENT என்பதாகும். இது 1981.07.10-ம் திகதி ஐரோப்பிய விண்வெளி கூடத்தில் இருந்து ஏரியேன் (ARIANE) என்ற விண்வெளிக் கப்பலின்மூலம் ஏவப்பட்டது.

☐ ஜாலியன் வாலாபாக் படுகொலை — இந்தியாவில் மான்ட் போட் சீர்திருத்தங்களின் விளைவாக ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்க பிரித்தானிய அரசு ரௌலற் சட்டத்தினைப் பிறப்பித்தது. அச் சட்டம், அரசாங்கம் விசாரணையின்றி எவரையும் தண்டிக்கும் அதிகாரத்தை வழங்கியது. இச் சட்டத்தை எதிர்க்கும் வகையில் அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் 1919.04.13ம் திகதி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான இந்தியர்கள் இதில் கலந்துகொண்டனர். ஆங்கில தளபதி ஜெனரல் டயர் என்பவன், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, நூற்றுக்கணக்கான மக்களைப் படுகொலை செய்தான். இவ் வரலாற்றுப் புகழ்மிக்க படுகொலையே "ஜாலியன் வாலாபாக் படுகொலை" எனப் பெயர் பெற்றது.

தொகுப்பு: ஆனந்தி.

உணவில் நல்லெண்ணெய் உபயோகிப்பது
உடல் நலத்திற்கு நல்லது.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
சுத்தமான நல்லெண்ணெய்

# N. K. நல்லெண்ணெய்

# N.K.G.
## SPECIAL LUNCH OIL

ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்
பின்னர் மறக்க மாட்டீர்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பாளரும் ஏகவிநியோகத்தரும் -

K. கோபாலகிருஷ்ணன்
சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு

## உளவியல்

# மனநோயும், சமூக - கலாசார- பொருளாதார நிலையும்

மனநோயானது உடலியல், உளவியல் மற்றும் சமூகவியல் காரணங்களினாலேதான் தோன்றுகின்றது. பேய், பிசாசு, மந்திரம், பில்லிசூனியம் போன்ற வற்றால் நிச்சயமாகத் தோன்றுவதில்லை.

உடலமைப்பு, பாரம்பரியம், குடும்பச்சூழ்நிலை சமூக - கலாசார - பொருளாதார நிலைகள், பண்பியல் தொகுப்பு மற்றும் மனவளர்ச்சி போன்றவற்றில் ஏற் படும் குறைபாடுகள் என்பவற்றால்தான் மனநோய் ஏற்படுகின்றது.

மேற்கூறிய காரணங்கள் தனித்து அல்லது இணைந்து செயல்படும் போது பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. மனிதன் அப்பிரச்சினைகளைத்தீர்க்க அல்லது சமாளிக்க முயலும் போது, சில சமயம் தோல் வியடைய நேரிடுகிறது. இத்தகைய தோல்விகளை ஏற் றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஒருவருக்கொருவர் வேறு பட்டு அமைகிறது. வாழ்க்கையில் பெரிய அதிர்ச்சியான சம்பவம் கூட சிலரை அவ்வளவாக பாதிப்பதில்லை. ஆனால், சிறு ஏமாற்றம் அல்லது சிறு அதிர்ச்சி சிலரை மிகவும் பாதித்து விடுகிறது. எனவே, ஒவ்வொருவரு டைய மன உறுதியைப் பொறுத்தும், பண்பியல் தொகுப்பைப் பொறுத்தும் (Personality) அவரது மன நலம் அமைகிறது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதன் தனதுசுற்றுப்புறச்சூழ்நிலைகளின் ஆதிக்கத்தைஎதிர்த்து அல்லது இணைந்து செயலாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அப்போது தான் வெற்றி கிடைக்கிறது. ஆனால், இத்தகைய மனப்பாங்கு இல்லாதவர்கள் எண் ணங்களிலும், உணர்ச்சிகளிலும், செயற்பாடுகளிலும் மாறுபாடுகள் உண்டாகி மனம் குழம்பி நாளடைவில் மனநோய்க்கு ஆளாகும் நிலை ஏற்படுகிறது.

மனநோய் ஏற்படக்காரணங்களான உடலமைப்பு, (Constitution) பாரம்பரியம் (Genetics) குடும்பச் சூழ் நிலை என்பனவற்றுடன் சமூக - கலாசார பொருளா தார நிலையானது குறிப்பிடக்கூடிய ஒரு காரணியாக உள்ளது. என்றுமே தீர்வுகாண இயலாத ஒன்றாக சமூ கப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உலகில் நிலை பெற்றிருக்கின்றன.

வறுமையின் கோரப்பிடியில் அவதியுறும் மக்களுக்கு மனநோய்வாய்ப்படும் அபாயம், வசதி படைத்தவர் களைக்காட்டிலும் அதிகம் என்பது ஆராய்ச்சிகளின் வாயிலாக நிரூபணம் ஆகியிருக்கிறது. மனநல மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளி களில் பெரும்பாலானோர் பொருளாதாரக் கஷ்ரங்கள் உள்ளவர்களே.

உதாரணமாக தொழில் வாய்ப்புகள் குறைந்த அல்லது, ஊதியம் குறைந்த தொழில்களில் ஈடுபடுவோர் தங்களது குடும்பத்தினை சரிவர நடாத்த இயலாமல் சிரமப்படுபவர் இத்தகைய சூழ்நிலையில் பிள்ளைகளின் படிப்பு, மருத்துவச்செலவு, திருமணம் போன்ற செலவு களுக்கு கடன்வாங்க நேரிடுகிறது. எதிர்பாராத வித மாக நோய்வாய்ப்படநேரிடும்போது அவரது வருவாயும் குறைகிறது. திடீரென எதிர்பாராத செலவுகள் ஏற் பட்டால் அதனை சமாளிக்க முடியாமல் போய்விடு கிறது. இதனால் அவருக்கு மனப்பாரம் ஏற்பட்டு பயம், பதட்டம் முதலியன உருவாகி சுயமதிப்பு இழந்து மனச்சோர்வுற்று எப்போதும் எரிந்து விழும் நிலையை அடைகிறார். குடும்பத்திலும், சமூகத்திலும் அவரது மதிப்பு குறைந்து பாதுகாப்பற்ற உணர்வு கொள்கிறார். மேலும் குடும்பவாழ்க்கையில் வெறுப்பு தோன்றி பொரு ளாதாரப் பழுவைத் தாங்கமுடியாமல் இறுதியில் மனத் தளர்ச்சி நோய்க்கு ஆளாகிறார். இச்சூழலிருந்து விடு பட சிலநேரங்களில் தற்கொலை முயற்சிகளில் கூட ஈடு படுகிறார்.

பொருளாதார காரணங்கள் தவிர அளவுக்கதிக மான வேலைப்பளு, திறமைக்குமீறிய வேலை, திருப்தி யற்ற வேலை, மேலதிகாரியின் அச்சுறுத்தல், பதவி நீக் கம் போன்ற பல்வேறு காரணங்களும் மனநோய்க்கு வித்திடுகின்றன. முதிர்மனநோய்கள் பொதுவாக சமூ கக்கலாசாரப் பொருளாதாரத்தில் மிகத்தாழ்ந்த நிலை யில் உள்ள குடும்பங்களிலேயே அதிகம் காணப்படுகின் றன என கூறப்படுகின்றது. தவறானபெற்றோர்களைக் கொண்ட பிள்ளைகள் பிற்காலத்தில் மனநோய்க்கு ஆளாகி சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும், சிறைச்சாலைகளில் உள்ள குற்றவாளிகளில் 90 சதவீதமானோர் இத்தகையவர்களே என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதிக நபர்களைக்கொண்ட வசதி யற்ற குடும்பங்கள், அந்தரங்கம் இல்லாத வாழ்க்கை முறைகள் போன்றவைகளும் மனநோய்க்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

வேல் முருகன் மார்க்
K. S திறம் நல்லெண்ணெய்

உணவுத் தேவைக்கும், வைத்தியத் தேவைக்கும்
என விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.

K. S. SPECIAL LUNCH OIL

எனக் கேட்டுவாங்க மறவாதீர்கள்

தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்

க. சிவகுமார் - சங்கானை கிழக்கு, பிரான்பற்று

நல்லெண்ணெய் என்றதும் நினைவில் வரவேண்டிய பெயர்

வேல் முருகன் மார்க் நல்லெண்ணெய்

K. S. SPECIAL LUNCH OIL

## போராளிக் கலைஞர் இருவர்

# மிருதங்க அரங்கேற்றம்

**போ**ராளிக்கலைஞர் திரு. தினேசின் மிரு தங்க அரங்கேற்றநிகழ்வு கடந்த 04-09-93 அன்று மாலை இளங்கலைஞர் கலாமன்ற மண்ட பத்தில் நடந்தேறியது. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமை வகித் தார். வாழ்த்துரைகளை யாழ். பல் கலைக்கழககலைப்பீடாதிபதி பேரா சிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வணபிதா யோசப்மைக்கல் அடிக ளார் ஆகியோர் வழங்கினர். மிரு தங்க அரங்கேற்றம் குறித்த மதிப் புரையை பிரம்மஸ்ரீவீரமணி ஐயர் நிகழ்த்தினார்.



தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் இவ்வரங் கேற்ற கலைஞருக்கு ஆசிச்செய்தி யொன்றினை அனுப்பியிருந்தமை குறிப்பிடத் தக்க ஒன்றாகும். இவ்வாசிச் செய்தியினை தமி ழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் நிகழ்வில் வாசித்தார்.

''எமது போராளிகள் போர்க்கலையில் மட்டு மன்றி சகலகலைகளிலும் நுணுக்கங்களைக் கற்று சகலகலாவல்லவர்களாக உருவாக வேண்டும் என் பது எனது ஆவல். எனது ஆவலைப்பூர்த்தி செய் யும்வகையில் நீ ஓர் இசைக்கலைஞனாக உன்னை உருவாக்கி எம் போராளிகள் எதை யும் சாதிக்க வல்லவர்கள் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளாய். இசைத் துறையில் உன் முயற்சி வெற்றிபெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள் இன்று உமது மிருதங்க அரங்கேற்றம் நிகழ்வதை அறிந்து மகிழ்ச்சியடை கிறேன். மிகக் குறுகிய காலத்தில் இசைக்கலையைப் பயின்று மேடை யேறும் அளவிற்கு திறமைபெற்ற உமது முயற்சியை நான் பாராட்டு கிறேன்'' இவ்வாறு அவ்வாசிச் செய் தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஏராளமான இரசிகர்களும் கலந்து கொண்டனர்.

# 'போர்உலா' நூல் வெளியீடு

**கப்**டன் மலரவன் எழுதிய 'போர் உலா' எனும் நூல் வெளியீட்டு விழா அவர் கல்வி பயின்ற யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத் தில் வெகு சிறப்பாக நடைபெற் றது. மலரவனின் உருவப்படத்திற்கு விடுதலைப் புலிகள் மகளிர் படை யணி தளபதி செல்வி. விதுசா திரை நீக்கம்செய்து மலர்மாலை அணிவித் தார். மலரவனின் அன்னையார் ஈகச்சுடர் ஏற்றிவைத்தார். மாண வர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் விழா நடை பெற்றது. கலை பண்பாட்டுக் கழ கப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்த, சிறப புரைகளை டாக்டர் ஜெயகுலராஜாவும் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும் நிகழ்த்தினர். நூலின் மதிப்புரைகளை யாழ். பல் கலைக்கழக பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ்,



திருமதி கோகிலா மகேந்தி ரன், திரு. சோ. பத்மநாதன் ஆகி யோரும் நிகழ்த்தினர். நன்றியு ரையை கலை பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் திரு. சேர லாதன் நிகழ்த்தினார்.

'போர் உலா' வித்தியாசமான போராட்ட இலக்கிய வடிவம் என உரை நிகழ்த் திய பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

☐ மனிதன் வரம்பில்லா வலிமை பெற்றவன் மனிதனுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது, காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.

— விவேகானந்தர்

தெறிப்பு

## வடமராட்சிகிழக்கில் வளராத கல்விநிலை

## கட்டுரை குறித்து வந்த இரு கடிதங்கள்

சாளரம் ஆசிரியர்குழுவினருக்கு.

1993 மே - யூன் சாளரம் இதழில் ஆங்கில ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக வெற்றிலைக்கேணி றோ. க. த. பாடசாலை அதிபரின் கூற்றைப் பிரசுரித்துள்ளீர்கள் இது முற்றுமுழுதான பிழையான தகவல் என்பதுடன் எனது தூய்மையான சுயநலமற்ற சேவைக்கும் எனது கௌரவத்திற்கும் பெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன். மேலும் இச்சம்பவம் பற்றிய உண்மை நிலையை உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

1. எங்கள் பாடசாலையில் ஏற்கனவே ஒரு ஆங்கில ஆசிரியையும் பகுதிநேர ஆங்கில ஆசிரியரும் இருந்தனர் என்பது பொய்யான தகவலாகும். 1992ம் ஆண்டு ஜனவரி மாதம் எமது பாடசாலை ஆங்கில ஆசிரியர் ஆசிரியப்பயிற்சிச் சாலைக்கு சென்றபின் 6 மாதங்களுக்கு மேலாக ஆண்டு 11 வரையுள்ள எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் எவரும் இல்லாமையால் எந்த வகுப்பிற்கும் அப்பாடம் போதிக்கப்படவில்லை. இதுபற்றி கல்வித்திணைக்களத்திற்கும் நான் பலமுறை அறிவித்துள்ளேன்.
2. இந்தநிலையில் ஆண்டு 5 வரையுள்ள வெற்றிலைக்கேணி றோ. க. த. பாடசாலையில் ஆங்கிலம் போதிக்கக்கூடிய இரண்டு ஆசிரியர்கள் இருந்தாலும் ஆண்டு 11 வரையுள்ள எமது பாடசாலையில் ஆங்கில பாடத்திற்கு ஆசிரியர் எவரும் இல்லாதாலும் ஆங்கிலப்பாடம் நடைபெறாத நிலையில் தனது பாடசாலையில் உள்ள ஆங்கில ஆசிரியர் ஒருவரை மூன்று நாட்கள் எமது பாடசாலையில் சேவையாற்ற சம்மதம் தெரிவித்து பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தார் இவ்வாறு அவருடைய எழுத்து மூலமான முழுச்சம்மதத்தின் பேரிலேயே அந்த ஆங்கில ஆசிரியர் 1992 யூன் மாதத்தில் இருந்து வாரத்தில் மூன்று நாட்கள் எமது பாடசாலையில் கடமையாற்ற தொடங்கினார்.
3. எமது பாடசாலையில் சேவையாற்ற வந்த குறிப்பிட்ட பெண் ஆசிரியை ஒருநாள் பலபேர் முன்னிலையில் அவமானப்படுத்தப்பட்டதால் அவ்வாசிரியை பிரதிக்கல்விப்பணிப்பாளருக்கு இது பற்றி முறையிட்டு, பிரதிக்கல்விப்பணிப்பாளர் அந்த ஆசிரியை அப்பாடசாலையில் கடமையாற்ற முடியாத சூழ்நிலையை ஏற்றுக் கொண்டதனால், 1993 தை மாதத்தில் இருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். குறிப்பிட்ட ஆசிரியரின் இது பற்றிய கடிதத்தையும் இத்துடன் அனுப்புகிறேன்.

மேலும் கொத்தணி அதிபர் என்ற முறையில் இப் பாடசாலை தொர்டர்பாக அண்மையில் இப் பாடசாலைக்காக செய்த சில செயற்பாடுகளையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

1. இடம்பெயர்ந்து வந்தபின் அவர்கள் தனியாக பாடசாலையை செயற்படுத்தவும், விரும்பிய இடத்தில் அவர்களுக்கான தற்காலிக கொட்டகை அமைக்கவும் உதவியுள்ளேன்.
2. எமக்கே தளபாடக்குறை இருந்தபோதிலும் அப்பாடசாலைக்கென எமது தளபாடங்களை தற்காலிகமாக வழங்கி உதவியுள்ளேன்.
3. போறூட் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வேண்டிய தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளேன்.
4. கொத்தணி விளையாட்டுப் போட்டியில் குறிப்பிட்ட இப்பாடசாலை பங்குபற்றவேண்டும் என்பதற்காக யாழ். மாவட்டத்தில் எங்கும் இல்லாதவாறு 11 வயதுப் பிரிவினையும் கொத்தணி விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்ற இடமளித்துள்ளேன்.

இப்படிக்கு
நஈ அரியரத்தினம் (கொத்தணி அதிபர்),
யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா
வித்தியாலயம்
முள்ளியான்.

---

கனம் சாளரம் ஆசிரியர் அவர்கட்கு,

கடந்த சாளரத்தில் எனது இடமாற்றம் பற்றி வந்த தகவலை தெளிவுபடுத்துவதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன். யா / வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு ஆங்கில ஆசிரியர் இல்லாமையினால் யா/வெற்றிலைக்கேணி றோ. க. பாடசாலை அதிபரின் சம்மதத்துடன் வாரத்தில் மூன்று நாட்கள் பரமேஸ்வரா பாடசாலையில் கடமையாற்றி வந்தேன்.

இந்த நிலையில் றோ. க. அதிபர் பலமுறை என்னுடன் முரண்பட்டுக் கொண்டு வந்தார். இதை நான் பெரிது படுத்தாது நாட்களைக் கழித்தேன். திடீர் என்று ஒருநாள் ஆசிரியர்களுக்கும் வெளியாட்களுக்கும் முன்னால் என்னை அவமானப்படுத்தினார். இவ் அவமானத்தை தாங்க முடியாது பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் இங்கு நடந்தவற்றைக்கூறி எனக்கு மீதி 2 நாட்களுக்கும் மாற்றம் செய்யும்படி கேட்டேன் எனது பரிதாப நிலையையும், அப்பாடசாலையில் சேவை செய்ய முடியாததையும், உணர்ந்த கல்விப்பணிப்பாளர் அவர்கள் 5 நாட்களும் பரமேஸ்வரா பாடசாலையில் கடமையாற்றும்படி கடிதம் அனுப்பினார்.

யோ. மேரிவிக்டோறியா
யா/வெற்றிலைக்கேணி
பரமேஸ்வரா வித்தியாலயம்
செம்பியன்பற்று.

# திலீபன் வளர்த்த தியாக வேள்வி



**1987**-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15ம் நாள் தேரோடும் நல்லூரின் வீதியிலே ஊர் கூடி நின்றது. வேரோடும் அடிமையை வெட்டிச்சரிக்க வென்று போராடப் புறப்பட்ட புலியொன்று புன்னகை முகத்தோடு புது வேள்வியைத் தொடக்கியது. எண்ணிடச் சிலிர்க்கும் தற்கொடை வேள்வி பன்னிரு நாட்கள் தொடர்ந்தது. நீரையும் வெறுத்து நிகழ்த்திய பேரற வேள்வியின் முடிவில் 26.07.87காலை 10.48 மணியளவில் அறப்புலியின் திருவிழிகள் அமைதியாக மூடிக்கொண்டன. மனிதமும் மாண்புகளும் வாய் விட்டுப் புலம்ப; பஞ்ச சீலம் பேசி நின்ற பாரதநாடு நாணியும் நடுங்கியும் நிலம் பார்க்க, மரணம் பணிய நிகழ்ந்த மாபெரும் வேள்வியது. அறத்தின் நாயகன் அண்ணல் திலீபன் நிகழ்த்திக் காட்டிய, தியாகத்தை மீறிய 'தலீபம்' அது.

ஊரெழு மண்ணிலே, 29.11.63ல் உருவான மானவித்து அண்ணல் திலீபன். ஆசிரியர் இராசையாவின் அன்புமகனாகி, பார்த்தீபன் என்ற பெயரினைத்தாங்கி, ஊர்ப்புறத்தவரின் அன்பிலே ஊறிவளர்ந்த தமிழ் ஈழத்தின் தன்மானச் சின்னம் அண்ணல் திலீபன். கேட்போரைப் பணிக்கப் பேசும் நாவலனாகவும், யாழ் மாவட்ட விருதினை 4 முறைகள் வென்ற சதுரங்க வீரனாகவும் திலீபன் விளங்கினார்.

கல்வியிலே சிறப்புற்றார். பள்ளியிலே பெருமை பெற்றார். பல்கலைக் கழகத்தின் மருத்துவப் படிப்புக்குத் தேர்வானார். ஆனால், நோயாளியாகி நொந்து துடிக்கும் தமிழீழம் திலீபனின் நெஞ்சிலே தீயை வளர்த்தது. தமக்கெனப் பண்பாடு, தனி நிலம் அரசு இவையெல்லாம் கொண்டு இனிதிருந்த தமிழ்மக்கள், தனித்தவராகி, தாங்குவாரின்றித் துடிப்பதைக் கண்டு திலீபன் திகைப்புற்றார். தமிழீழம் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கப்படுவதையும், கல்வித் தரு தறிக்கப்படுவதையும், மொழியும் மானமும் பழிக்கப் படுவதையும் கண்டு தவிப்புற்றார். பிறந்த பொன்னாட்டின் சேவைக்காகக் கல்வியைத் துறந்து களப்புலியானார்.

புலிகளின் இலட்சியப் பாசறையிலே 1983ல் இணைந்து உறுப்பினரான திலீபன், கொள்கையில் திடமும் தெளிவும், கொண்டவரானார். ஆற்றலும் அழகும், நேர்த்தியும், நிஜமும் கொண்ட சொற்களால் மாரி போல பொழிகின்ற நாவன்மை கொண்டிருந்தார். இதனால் விடுதலைப் புலிகளின் கொள்கை விளக்கும் பணியிலே ஈடுபட்டார். ''களத்தில்'' என்ற மாத இதழை நடத்தி மக்களின் உளத்திலே புகுந்தார். மக்களின் நெஞ்சிலே விடுதலை வித்தினைத் தூவினார். நீரூற்றிப் பண்படுத்தி விடுதலைப் பயிர் வளர்த்தார்.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள் அமைப்பு, தேசபக்தர் அமைப்பு, விழிப்புக்குழுக்கள், கிராமிய நீதிமன்றங்கள், ஒலி ஒளிச்சேவை, தமிழர் கலாசார அவை, தொழிற் சங்கங்கள்... இவை அண்ணல் திலீபனின் கை வண்ணம் படிந்து, பொலிந்து, வளர்ந்தவை. அரசியல விழிப்புணர்வை ஆக்கும் பணியில் அண்ணல் திலீபனின் சேவை அளப்பரியது; வியப்புக்குரியது. மக்களோடு மக்களாகக் கலந்து ஒன்றி, தமிழீழத்திக்குகளில் தன்மானத் தீயை திலீபன் எரிய வைத்தார்.

விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை விளங்கிக் கொள்ளாத அல்லது விளங்கமறுத்த ராஜீவ் காந்தி சிங்கள அரசோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். இலங்கை இந்திய ஒபபந்தம் கலங்கும் தமிழரின் நலனைக் காக்காது என்று திலீபன் தெளிவாக உணர்ந்தார்; தெளிவாக உரைத்தார். இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவான 1987. 02. 29 ம நாளன்று. 14 தமிழர்களை மூதூர் மல்லிகைத்தீவு வயல்வெளியில் வைத்து பதைக்கப பதைக்கச் ஸ்ரீலங்கா இராணுவம் சுட்டுக்கொன்றது;

பூநகரி 4 ம்கட்டை இராணுவமுகாமுக்கு முன்னே முல்லைத்தீவு தேவதாஸ், கைதடி செந்திலவேல் என்னும் இருவரையும், திருமலை சாம்பல் தீவில் 4 மாதக்குழந்தை உட்பட நான்கு தமிழர்களையும், ஸ்ரீலங்கா இராணுவம் கொன்று முடித்தது.

தமிழர் நலனுக்கென்று ஒப்பந்தம் உருவான நாளில் ஸ்ரீலங்கா இராணுவம் செய்த இரக்கமற்ற கொலைகள் இவை. தொடர்ந்து வெடித்த வன்முறையில் ஆயுதக்கையளிப்புச்செய்த விடுதலைப் புலிகள் வேட்டையாடப்பட்டனர். தமிழீழம் குமுறியது; குழம்பியது. வீரம் மிகுந்த வேங்கைகள் வேட்டையாடப் படுவதையும் தமிழீழ மண் மீழ் குடியேற்றப் போர்வையில் அரிக்கப்படுவதையும், ஆயுதம் களைவதில் அக்கறை காட்டிய பாரத அரசு, பார்த்துக்கொண்டு பேசாதிருந்தது.

இந்த இழிநிலைக்கெதிராக அண்ணல் திலீபன் கொதித்தெழுந்தார். 7-9-87 ல் யாழ். கோட்டையருகே கூடிநின்ற மக்களின்முன்னே கொதிப்போடு பேசினார். 'அடிமைச்சின்னமான யாழ்கோட்டையில் தமிழர் கொடிகள் பறக்கவேண்டும்; மக்கள் புரட்சிவெடித்

துப்பரவி மண்ணை மீட்கவேண்டும்'' என்று வெடிப்போடு முழங்கினார். ஒப்பந்தத்துக்கு முரணாக தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதை, 'தமிழீழ மக்களின் தாயகத்தாகம், விடியல் வரும்வரை தீராது என்பதை உலகுக்குக்காட்ட எண்ணி அண்ணல் திலீபன் உண்ணா நோன்பினை ஆரம்பித்தார். காந்தி பிறந்ததேசம், அறவேள்வியின் அழுத்தத்தைப் புரிந்து கொள்ளும் என்று நம்பி, ஐந்து கோரிக்கைகளை முன்வைதது திலிபன் திலீப வேள்வியைத் தொடங்கினார்.

1) ஸ்ரீலங்காச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்.
2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழீழத்தை அரிக்கும் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்.
3) இடைக்கால அரசு அமையும்வரை, புனர்வாழ்வு வேலைகள் இடைநிறுத்தப்பட வேண்டும்.
4) தமிழீழத்தில் சிங்களக் காவல் நிலையங்கள் திறப்பதை நிறுத்தவேண்டும்.
5) ஊர்காவற் படைகளின் ஆயுதங்கள் களையப்பட்டு, பள்ளிக்கூடங்கள்போன்ற பொது நிலையங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும்.

அறவேள்வி நடந்தபோது தமிழீழம் நல்லூர் மண்ணிலே திரண்டது. தமிழீழம் முழுவதும் திலீபக்காற்று விடுதலைத்தீயை விசிறத்தொடங்கியது ... ஆனால் பஞ்சசீலம் பாரதம் பார்த்துக்கொண்டு பேசாதிருந்தது. உலக அரங்கிலே பாரததேசத்தின் 'அமைதிவேடம் கலைந்த அதேவேளை, எந்தத்தேசத்தின் எதேச்சாதிகாரத்தையும் எடுத்தெறிந்துவெல்லும் தகுதியும் தீரமும், தமிழீழதேசத்துக்குண்டு. என்ற உண்மை புலரத் தொடங்கியது. அண்ணல் திலீபன் அறவேள்வியின் ஆகுதியாகத் தன்னைத் தந்த கணத்திலிருந்து, தமிழீழம் புதிய வேகத்தோடு, புதிய சிலிர்ப்போடு, புதிய பார்வையோடு புரட்சிப்பாதையிலே நடக்கத்தொடங்கியிருக்கிறது.... திலீபனின் கனவுகள நனவாக்கும் உறுதியோடு, அடக்குமறை, அழிப்புவேலை, குருதியூற்று, மரணத்தீ .. இவற்றுக்கெதிராக ''திலீபவலுவாடு'' நடந்துகொண்டிருக்கிறது.

''தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த தியாகத்தைச் செய்யமுடியுமோ அந்த அற்புதமான பணியைத்தான் திலீபன் செய்திருக்கிறான். உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரினும் உன்னதமானது நமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்'' தமிழீழத்தேசியத் தலைவரின் இந்தவார்த்தைகள் திலீபஒளியில் தோய்ந்து வந்தவை. அந்த வார்த்தைகள் மேலும் மேலும் தியாகத் தீயிலே தம்மைப் புடமிட்டுக் கொள்ளும் வலுவை தமிழீழ மக்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பவை.

## ஆபத்தான வாந்திபேதி...

(7 ஆம் பக்கம் தொடர்ச்சி)

இடைவெளி விட்டுக்கழியும் மலம் எதுவித எத்தனிப்பும் இல்லாது, தொடர்ந்து நீராகக்கழிவதையும் அவதானிக்கமுடியும். அடிவயிற்றில் நோவும் காணப்படும். நீராக மலம் கழிவதைத்தொடர்ந்து வாந்தியும் காணப்படும்.

சரியான தண்ணீர் தாகமாக இருக்கும்.

இந்நிலையில் நோயாளி மயக்கமடையமுடியும்.

கண்குழிவிழுதல், கைகால்களில் தோல்சுருங்குதல், சத்தம் வரககஸரப்படல் காணப்படும்.

ஓர் பதட்டமான நிலைமையை நோயாளியில் அவதானிக்கமுடியும்.

கால்கள் அடிவயிறு போன்ற இடங்களில் குறண்டுதல் போன்ற பிடிப்புக்கள் காணப்படும்.

சலம்போவதும் குறைர்து காணப்படும்.

படிப்படியாக மலம்போவது குறைந்தும், வாந்திபோவதும் குறைந்தும், ஈற்றில் மரணமும் சம்பவிக்கமுடியும்.

### 4) நோயைத் தடுக்கும் முறைகள்

நோயாளியின் மலத்தில் காணப்படும் கிருமிகள் உணவு, நீர் மூலமாகச் சுகதேகியை அடையும். இத்தொற்றை (Faecal Oral Transmission) என அழைப்பர்.

தடைமுறைகளாவன

1) மலகூடம் பாவித்த பின்பும், உணவு தயாரிப்பதற்கு முன்னதாகவும் கைகளைச் சவற்காரம் இட்டுக் கழுவுதல் வேண்டும்.
2) நன்றாக வேகவைத்தஉணவையே உட்கொள்ளவும்.
3) ஆக்கிய உணவை உடனடியாக உண்ணவும்.
4) நன்றாக வேகவைத்த காய்கறிகளை உண்ணவும். பச்சையாகவோ, தோல் நீக்காத பழங்களையோ -உண்ணாதிர்.
5) துப்பரவான சூழலில் பெறப்பட்ட நீரைக் குடிப்பதற்குப் பாவிககவும். பைப் மூலம் பெறப்படுமநீர், கானட்பம் மூலம் பெறப்படும நீர், மழைநீர் சிறநததாகும், பொதுக்கிணறுகளில பெறப்படும் நீர், கட்டாயமாகக் குளோறின் இடப்பல் வேண்டும் அத்துடன் கொதித்தாறிய நரையே குடிப்பதற்குப் பாவித்தல் வேண்டும்.
6) நீரைத்துப்பரவான பாத்திரத்தில் மூடிவைத்தல் வேணடும். கரண்டி அல்லது அகப்பையினால கைபடாது நீரைக்குடிப்பதற்கு எடுக்கவும்.
7) மலகூடத்தில் மலம் கழிக்கவும். இல்லாவிடத்து குழிகளில் மலம் கழிதது மூடிவிடவும்.
8) நோயின் ஆரம்ப அறிகுறிகாணின் சிகிச்சைக்காக வைத்திய நிலையங்களை நாடவும். அத்துடன் பொதுச் சுகாதார ஊழியர்களுக்கு அறிவிக்கவும்.
9) மரணச்சடங்குகள். அன்னதானம் வழங்கும் வைபவங்களில்பொதுமக்கள் கூடுதலை முடியுமான அளவுதவிர்க்கவும்.
10) நீராகாரம் - கஞ்சி, இளநீர், தேசிக்காய்நீர், நெல்லுப்பொரிநீர், ஏனைய நீராகாரங்கள், வயிற்றோட்டத்தின்போது பாவிப்பதை ஊக்குவியுங்கள் அத்துடன் ஜீவனி பாவிப்பதை ஊக்குவித்தல் வேணடும் இதன்முலம் ஆபத்தில் இருந்து பாதிக்கப்பட்டவரைக் காப்பாற்ற முடியும்.

# சத்தியா பேக்கறி

பஞ்சுபோன்ற மென்மையான

பாண், பணிஸ் வகைகளை
சாப்பிடும்போது உங்கள் மனக்கண்ணில்
சத்தியா பேக்கறி தோன்றலாம்

தரம், சுவை, தூய்மை மிக்க
பேக்கறி உணவுகளை சத்தியாபேக்கறி
உங்களுக்கு வழங்குகின்றது.

நினைவில் நிற்க வேண்டிய பெயர்

# சத்தியா பேக்கறி

இல. 200, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

என். என். ஆர். ரான்ஸ்போட் சேவிஸ்

வாழ்த்துகிறது

மூன்றாம் ஆண்டினைக் கடந்து வீறுநடை போடும்
இளையோர் திங்கள் இதழான

**சாளரம்**

பல்லாண்டுகள் வாழ்ந்து பயன்தர வேண்டுமென
வாழ்த்துகிறோம்

பிரபல எள்ளு வியாபாரிகள்

# என்.என்.ஆர். ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

உரிமையாளர் - நாகேந்திரம் நாகரெத்தினம்

பிரான்பற்று - பண்டத்தரிப்பு.